# ஆட்சிமன்றத்தில் விலங்கினங்களின் பெயர்கள் பரிமாறப்பட்டன


Registered as a News paper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு

மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 192
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆவணி 7 ஜ: ஆகிர் 9 சனிக்கிழமை [23-8-69]


# வட்டமேசை மகாநாடு யோசனைக்கு ஆதரவு

## ஆனல் தேர்தலுக்கு முன் செயற்படுமா?

கோட்டை, வெள்ளி

மொழி உரிமை உட்பட தமிழர் பிரச்னை அனைத்துக்கும் நிரந்தரமான தீர்வு காண்பதற்கு வட்டமேசை மகாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மீரிகமைப் பிரதிநிதி திருமதி. சிவா ஒபயசேகரா ஆட்சிமன்றத்தில் தெரிவித்த யோசனைக்கு ஆளும்கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் ஆதரவு அதிகரித்து வருவதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இதேசமயம் எதிர்க்கட்சியில் ஒரு சாரார் திருமதி ஒபயசேகராவின் யோசனை இந்தச்சமயத்தில் தெரிவித்திருக்க வேண்டியதில்லையென்றும் அடுத்த தேர்தலின் பின்னரே இதுபோன்ற வட்டமேசை மகாநாடு கூட்டுவது பயன்தரக் கூடிய என்றும் கருதுவதாகத்...

யோசனையை விரைவில் செயல்படுத்துவதற்கு பிரதமரைத் தூண்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு தமிழ்ப்பிரதிநிதிகள் சிலர் ஆலோசனை செய்து வருவதாகவும் அறியப்படுகிறது.

சிறுபான்மையினர் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு...

பதற்கும் இன்றைய அரசியல் அமைப்பைத்திருத்துவது அல்லது புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவது என்றயோசனையும் இப்போது ஆளும்கட்சிக்கும் எதிர்க்கட்சிகளிடையிலும் தீவிரமாகப்பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. இந்த இரண்டு யோசனைகளையும்...

## ‘பன்றிகள் அட்டகாசம் பொறுக்கமுடியவில்லையே’
### மீனவர்கள் புகார்

உடுப்பிட்டி, வெள்ளி

குருநகரில் கருவாட்டுக் கொட்டில்களைப் பன்றிகள் தரைமட்டமாக்கி வருகின்றனவாம். இதனல் குருநகர் மீனவர்கள் கவலையும், அச்சமும் அடைந்துள்ளனர். இது சம்பந்தமாக மீனவர்கள் யாழ். மாநகரசபையின் 2-ம் வட்டார உறுப்பினர் திரு எம் எஸ். பேரின்பநாயகத்திடம் நேரில் சந்தித்து தங்கள் குறைபாடுகளை விளக்கி மகஜர் ஒன்றைச்சமர்ப்பித்துள்ளனர்.

அம்மகஜரில் ‘‘நாங்கள் போடும்கருவாடுகளை இங்கே திரிகின்ற பன்றிகள் தின்று சேதப்படுத்தி விடுவதோடு கொட்டில்களையும் நாசமாக்கிவருகின்றன. இது பற்றிப் பன்றிஉரிமையாளர்களிடம் பலதடவைகள் சொல்லியும் அவர்கள் எவ்விதகவனமும் எடுக்கவில்லை. நாங்கள் பன்றியைத் தாக்கித்துரத்தினல் உரிமையாளர்கள் சண்டைக்கு வந்துவிடுகின்றனர். இக்கஷ்டங்கள் பற்றிமுன்னர் ஆணையாளர்களிடம் முறையிட்டும் எமது கஷ்டங்களை எவரும் தீர்த்து வைக்கவில்லை. ஆதலால் உடன் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டும்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது

திரு. பேரின்பநாயகம் இவ்விடயமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி ஆவன செய்து கொடுப்பதாக உறுதியளித்தார்.

## டைனமைற்வைத்து

## வர்த்தக அமைச்சர் - டாக்டர் பெரேரா சூடான விவாதம்

கொழும்பு, வெள்ளி

இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் வர்த்தக அமைச்சர் திரு ஹியூ பெர்ணண்டோவுக்கும் டாக்டர் என். எம். பெரேராவுக்குமிடையில் சூடான விவாதம் நடைபெற்றது. சபாநாயகர் தலையிட்டு அமைதியை நிலைநாட்ட வேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டது.

காலஞ்சென்ற திரு பண்டாரநாயகா பிரதமராக இருந்த காலத்தில் டாக்டர் என்எம் பெரேரா 1235 வேலைநிறுத்தங்களை நடத்தினர் என்று திரு ஹியூ பெர்ணண்டோ கூறி திரு பெரேரா சுதந்திரக் கட்சியுடன் அப்போது காட்டிய எதிரித்தனத்தை விபரித்துக் கூறமுற்பட்டபோது திருபெர்ணண்டோவுக்கும் டாக்டர் பெரேராவுக்குமிடையே விவாதம் சூடாகியது,

அப்போது இருவருக்குமிடையே விலங்கினங்களின் பெயர்களும் பரிமாறப்பட்டன. நாயின் பெயர் முக்கிய இடம் பெற்றது. ‘வாய்பொத்து’ என்று திரு. பெர்ணண்டோ டாக்டர் பெரோராவைப் பார்த்துக் கூறினர்.

இந்த சந்தர்ப்பத்தில் திரு. டி. பி. சுபசிங்கா குறிக்கிட்டு திரு. பெர்ணண்டோ காசில்லாத சமயத்தில் தம்மிடம் அடைக்கலம் புகுந்திருந்தார் என்றபோது திரு. பெர்ணண்டோ திரு. சுபசிங்கா அலரி மாளிகையில் முன்னர் பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தார் என்றார்.

## கேரள சட்டசபையில் அமளி:
## காலவரையின்றி கூட்டம் ஒத்திவைப்பு

திருவானந்தபுரம்ஆக 22

கேரள சட்டசபையில் இன்று சுமார் இரண்டு மணி நேரம் பெரிய அமளி நிலவியது. மார்க்ஸிய வாதியான திரு. கோபாலன் எம் பி தெரிவித்திருக்கும் சில கருத்துக்கள் பற்றி சபையில்எதிர் கட்சித்தலைவர் திரு. ஜார்ஜ் கிளப்பிய ஒரு ஒழுங்குப் பிரச்னையின் போதே இந்த அமளி ஏற்பட்டது.

திரு. ஏ. கே. கோபாலன் புதுடில்லியில் ஓர் அறிக்கையில் கேரளச் சட்டசபையில் நிலச் சீர்திருத்த மசோதா நிறைவேற்றப்படாவிட்டால் சட்டசபை கலைக்கப்படும் என்றுஅச்சுறுத்தியிருப்பதாகவும் இதுசபையின் உரிமையில் தலையிடுவதாகும் என்றும் எதிர்கட்சியான காங்கிரஸ் சட்டசபைத் தலைவர் திரு. ஜார்ஜ் தெரிவித்தார். இந்த விவாதத்தில் எம். பி. ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதால் இது பற்றி லோக சபை சபாநாயகருக்கு அறிவிப்பதாக சட்டசபை சபா நாயகர் கூறினர் கேரள அமைச்சர் ஒருவர் பதிலளிக்கையில் திரு கோபாலன் அப்படி எதுவும் தெரிவிக்கவில்லையென்றும் அதனல் இது பற்றி லோக்சபை சபாநாயகருக்கு அறிவிக்கத் தேவையில்லையென்றும் கூறினர். எப்படியும் இதில் தலையீடு இருப்பது உண்மைதான் என்று திரு. ஜார்ஜ் வாதிட்டார். இந்தக் கட்டத்தில் உணர்ச்சியைத் தூண்டும் வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டு சுமார் இரண்டுமணி நேரம் அமளி நிலவியது. வெறும் கூச்சலும் கத்தலுமாகவிருந்தது. இந்த நிலைமையில் சபையை ஒத்திவைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறி சபாநாயகர் கூட்டத்தை காலவரையின்றி ஒத்திவைத்தார்.

## பாகிஸ்தான் நிபுணர் குழு யாழ். மாவட்டத்தில் ஆராய்ச்சி

அளவெட்டி, வெள்ளி

பாகிஸ்தான் நிபுணர்குழு யாழ் மாவட்டக் கரையோரங்களிலுள்ள சங்குகளைப் பார்வையிட்டு ஆராய்ந்து வருகின்றது

பாகிஸ்தானைச் சேர்ந்த கொன்சல் இன்டஸ்ரீசைச் சேர்ந்த திரு நொந்தி என்பவர் தலைமையிலான நிபுணர் குழு ஒன்று இலங்கைக்கு விஜயம்செய்து தற்போது யாழ் மாவட்டத்திலுள்ள கரையோரப் பாகங்களுக்கு சென்று அங்கு சங்கு உற்பத்தியைப் பார்வையிட்டு அவற்றைக் கொள்வனவு செய்வதுபற்றி ஆராய்ந்து வருகின்றது

இக் குழுவினருக்குத் தேவையான ஒழுங்குகளை மேற்படி சமாச முன்னுள் தலைவர் திரு எஸ். ஸ்ரனிஸ், லொஸ் செய்து வருகிறார்.

இக் குழுவினர் இம்மாத இறுதிக்குள் சங்கு சம்பந்தமாக ஆராய மகாநாட்டை கொழும்பில் கூட்டவிருக்கின்றார்கள்.

வட மாகாணத்திலிருந்து பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான சங்கு பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத் தக்கது.

வடமாகாண கடற்றொழி...

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வ...

## கடைசிச் செய்திகள்

### பாரதம்

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை பதவியிலிருந்து விலக்க வேண்டுமெனக் கட்டளை பிறக்கும்படி கோரி முன்னைநாள் பாரத சிவில் சேவை அதிகாரி திரு காபூலால் தொடரப்பட்ட மனுவை இன்று உயர் நீதிமன்றம் நிராகரித்தது. இந்திரா சர்வாதிகாரியாகமுனைகிறார் என திரு காபூல் வாதாடினர்,

### ஜெரூசலம்

தீயினல் சேதப்பட்ட ஜெரூசலத்திலுள்ள பழமையும் புராதன சிறப்பும்மிக்க முஸ்லிம் மசூதியைச் சுற்றி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மகஜரில் ... நாங்கள் போடும்கருவாடுகளை இங்கே திரிகின்ற பன்றிகள் தின்று சேதப்படுத்தி விடுவதோடு கொட்டில்களையும் ... நாசமாக்கிவருகின்றன. இது பிடப்பட்டுள்ளது

திரு. பேரின்பநாயகம் இவ் விடயமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி ஆவன செய்து கொடுப்பதாக உறுதியளித்தார்.

## டைனமைற்வைத்து மீன்பிடித்தார்களாம்

### ஒருவருக்கு 6 வாரக் கடூழியம்; மற்றவருக்கு ரூ. 500 அபராதம்

யாழ்ப்பாணம், சனி

வேலணைக் கடலில் டைனமைற் வைத்து மீன் பிடித்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் யாழ். மாஜிஸ்திரேட் ஜனுப் ஜமீல், பலாலியைச் சேர்ந்த அவுராம்பிள்ளை ஆரோக்கியநாதருக்கு 6 வாரக் கடூழியச் சிறைத் தண்டனையும், கொட்டடியைச் சேர்ந்த சின்னையா சண்முகத்துக்கு 500 ரூபாய் அபராதமும் விதித்தார்.

யாழ் மாவட்ட மீன்பிடி இலாகாவில் டைனமைற் மூலம் மீன் பிடிப்பவர்களைப் பிடிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆர். பத்மரத்தினம், எஸ். ஆர். எஸ். ஏரம்பு, பி. ஏச். ரி. டி. சில்வா ஆகியோர் இவர்களை ஆஜர் செய்தனர்.

இந்தக் கோஷ்டியினர் டைனமைற் மூலம் மீன் பிடித்ததாக வேலணையிலும் பண்ணையிலும், கரையூரிலும், நாவாந்துறையிலும் 9 பேரைப் பிடித்தனர் இவ் வழக்குகள் யாழ். மாஜிஸ்திரேட்கோர்ட்டில் எடுக்கப்படவுள்ளன.

கடந்த சில மாதங்களில் இவை பிடிக்கப்பட்டன.

...யில் ஒரு சாரார் திருமதி ஓபயசேகராவின் யோசனை இந்தச்சமயத்தில் தெரிவித்திருக்க வேண்டியதில்லையென்றும் அடுத்ததேர்தலின் பின்னரே இதுபோன்ற வட்டமேசை மகாநாடு கூட்டுவது பயன்தரக் கூடியதென்றும் கருதுவதாகக் கூறப்படுகிறது.

வட்டமேசை மகாநாடு கூட்டும் யோசனையை எதிர்க்கட்சிப் பிரதிநிதி ஒருவரே தெரிவித்திருப்பதால் இந்த யோசனையை செயல்படுத்துவதற்கு பிரதமரைத் தூண்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு தமிழ்ப்பிரதிநிதிகள் சிலர் ஆலோசனை செய்து வருவதாகவும் அறியப்படுகிறது.

சிறுபான்மையினர்பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு சகல கட்சித்தலைவர்களையும் கொண்ட ஒருவட்டமேசை மகாநாடு கூட்டுவது பற்றிய யோசனையும், நாட்டின்சகல பிரச்னைகளுக்கும் தீர்வுகாண்...

## 'புதிய ஜனதிபதி கிரி இலங்கையின் நண்பர்'

கொழும்பு, வெள்ளி

திரு. கிரி இலங்கையின் நண்பர். இலங்கையில் இந்தியாவின் முதல் ஹைகமிஷனராக இருந்துள்ள அவர் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் மேலும் நல்லுறவு வளர்வதற்கு ஆக்கபூர்வமாக அதிகம் சேவைபுரிய முடியும் என்று இலங்கை-இந்திய நட்புறச் சங்கத்தின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவரான திரு. எஸ். சிவசுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

இந்தியாவில் தற்பொழுது நிலவும் சூழ்நிலையில் திரு. கிரியைத்தவிர வேறு யாரையும் ஜனதிபதியாகத் தெரிந்தெடுத்திருக்க முடியாது. இந்தத் தெரிவின் மூலம் இந்தியாவின் எதிர்காலம் பிரகாசமடைந்துள்ளது. நாட்டின் முன்னேற்றத்துக்கு அவரது அனுபவம், செல்வாக்கு, சேவை அனைத்துமே பயன்படுவதாக இருக்கும். இந்தியாவில் கட்சிகளுக்கிடையிலும், பிராந்தியங்களுக்கிடையிலும் தலைவர்களுக்கிடையிலும் ஒருமைப்பாட்டைத் தோற்றுவிப்பதில் அவரால் பெரிதும் பணியாற்ற முடியும் என்று திரு. சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவின் சரித்திரத்தில் நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் திரு. கிரிக்கு மற்ற எவரையும்விட அதிக பொறுப்பு இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றது. திரு. கிரியும் பிரதமர் இந்திராவும் கூட்டாக உழைப்பதன் மூலம் இந்தியாவுக்குப் பெரும் சேவைசெய்தவர்களாவார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## தம்பிமுறையான எதிரி என் கழுத்தில் உடைந்த போத்தலால் குத்தினர்

### கொலைமுயற்சிவழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

''எதிரி எனது ஒன்றுவிட்ட தம்பி. ஆனல் தாலிக்கொடி ஒன்று சம்பந்தமாக இச்சம்பவம் நடந்ததற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரிலிருந்து நான் அவருடன் கதைப்பதில்லை. சம்பவம் நடந்த அன்று நான் எனது அண்ணர் முறையான கந்தையா வீட்டில் நின்றபோது எதிரி வெளியே நின்று ''ஐயம்பிள்ளை இங்கேவா'' என்று அழைக்க நான் சேன்றேன். அவர்என்னைக்கட்டிப் பிடித்து உடைந்த போத்தலால் கழுத்தில் குத்தினர்.''

கொலைமுயற்சி வழக்கில் சாட்சியமளித்த மருதப்பு ஐயம்பிள்ளை என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த மருதப்பு ஐயம்பிள்ளை என்பவரை 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் திகதி உடைந்தபோத்தலால்வெட்டிக் காயம் விளைவித்துக் கொலை செய்ய முயற்சித்ததாக சின்னத்தம்பி இராசலிங்கம் என்பவர் மீது இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது

எதிரி சார்பில் வழக்கறிஞர் எஸ். நாகராசா, புரக்டர்கள் ஜிம்மிராசரத்தினம், எம். சிற்றம்பலம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். திரிக்காக அரசாங்கத்தால்வழக்கறிஞர் எஸ். சிவபாக்கியநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். புராசிக்கியூசன் தரப்பில் வழக்கறிஞர் பிரியந்தேபெரேரா ஆஜராகியிருந்தார்.

டாக்டர் வி. ஸ்ரீகாந்தன் சாட்சியமளித்த பின்னர் ஐயம்பிள்ளை சாட்சியமளிக்கையில் தனக்கு கழுத்தில் எதிரி குத்தியதும் தான் அறிவிழந்து விட்டதாகவும், பின்னர் அறிவு வரும்போது ஆஸ்பத்திரியில் இருந்ததாகவும், மிகுதிக் காயங்கள் எவ்வாறு ஏற்பட்டதென்று தெரியாதென்றும் சொன்னர்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. நாகராஜாவினல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதுசாட்சிதெரிவித்ததாவது:-

சம்பவம் நடந்த அன்று காலை 8மணியளவில் நான் கந்தையா வீட்டுக்குப் போனேன். அங்கு நின்றபோது எதிரி வெளியில் நின்று என்னைப் பயமுறுத்தல்தொனியில் அழைத்தார். அதற்குமுதல்நான் எதிரியை எங்கு கண்டாலும் கதைப்பதில்லை.

படலைக்கு வெளியே வந்த பின்னர்தான் கூப்பிட்டது எதிரி என்று தெரியும். அப்போது நான் நின்ற வீட்டில் கந்தையாவும் மனைவியும் இருந்தார்கள். ஆனல் நான் தனியத்தான் வெளியே வந்தேன். அவர்கள் இதுபற்றி ஒன்றும் கேட்கவுமில்லை; வெளியில் வரவுமில்லை.

நான் வெளியில் சென்ற பின்னரும் ஒருவருடன் ஒருவர் கதைக்கவில்லை. என்னை வரச்சொல்லிச் சொன்னர்; நான் பின்னல்சென்றேன்.

கிராமசபை றேட்டில் ஏறியதும் எதிரி தனது இடதுகையால் எனது உடம்பை இறுக்கிப்பிடித்து வலது கையில் வைத்திருந்த உடைந்த போத்தலால் கழுத்தில் குத்தினர்.

எதிரி எவ்வாறு தன்னைக் கட்டிப்பிடித்துக் குத்தினர் என்பதையும் சாட்சியான ஐயம்பிள்ளை நீதிமன்றத்தில் செய்துகாட்டினர்.

தனக்கு அறிவு வந்த பின்னரே ஆஸ்பத்திரியில்பொலிஸர் தனது வாக்கு மூலத்தைப் பதிவுசெய்ததாகவும், அப்போதும்கூட பொலிசார் கேட்ட கேள்விகளுக்கு மட்டுமே தான் கையினல் சைகை மூலம் பதிலளித்ததாகவும், வாயால் பதில் எதுவும் சொல்லவில்லையென்றும் சாட்சி மேலும் தெரிவித்தார்மேல்விசாரணை இன்று காலை நடைபெறும்.

(கா. நி)

...ஜந்திருக்கும் இன்றைய அரசியல் அமைப்பைத்திருத்துவது அல்லது புதியஅரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவது என்றயோசனையும் இப்போது ஆளும்கட்சிக்கும் எதிர்க்கட்சிகளிடையிலும் தீவிரமாகப்பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. இந்த இரண்டு யோசனைகளையும் அல்லது இரண்டில் ஒன்றையாவது அடுத்தபொதுத் தேர்தலுக்குமுன் செயல்படுத்துவதில் எந்தக்கட்சிக்கும் அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை

...யாழ் மாவட்டத்திலுள்ள கரையோரப் பாகங்களுக்கு சென்று அங்கு சங்கு உற்பத்தியைப் பார்வையிட்டு அவற்றைக் கொள்வனவு செய்வதுபற்றி ஆராய்ந்து வருகின்றது

வடமாகாண கடற்றெழிலாளர் சங்கங்களின் சமாச நிர்வாகிகளின் ஆதரவுடன் இக் குழுவினர் ஊர்காவற்றுறை, மன்னர், விடத்தல்தீவு உட்பட இன்னும் பல இடங்களுக்குச் சென்றுர்கள்.

...மதியான சங்கு பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் ஆவணி மூல உற்சவமாகிய இன்று பகல் 10 மணிக்கு விசேஷ அபிஷேகமும் இரவு 7 மணிக்கு பிட்டுக்கு மண் சுமந்த உற்சவமும் நிகழும்.

முதலாம் எதிரி

## பொலிசாருக்கு தகவல் கொடுத்தால் கொலைசெய்வதாக பயமுறுத்தினர்

### சுன்னகம் மயான கொலை வழக்கில் சாட்சியம்

மல்லாகம், வெள்ளி

''சுன்னகம் மயானத்தில் வாலிபன் ஒருவரை கொலை செய்துவிட்டு கிருஷ்ணன் (1 ம் எதிரி)வேறு இரு நபர்களை கொலைச் சம்பவத்துடன் தொடர்பு படுத்த முயற்சிப்பதாகவும், இதனை பொலிஸார் நம்ப வேண்டாமெனவும் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு சாவகச்சேரியிலிருந்து முத்திரை ஒட்டப்படாது அனுப்பிய தபால் மூலம் தெரியப்படுத்தினேன். ஸ்ரீ காந்தன் கொலை பற்றி முதலாம் எதிரி எனக்கு கூறிய தகவல்களை பொலிஸாருக்கு தெரியப்படுத்தினல் என்னைக் கொலை செய்து விடுவதாகபயமுறுத்திய முதலாம் எதிரி கொலை சம்பவம் குறித்து சொல்லிய எல்லாத் தகவல்களையும் கிளிநொச்சிப் பொலிஸ் அளித்த வாக்கு மூலத்தில் கூறினேன்.''

சுன்னகம் மயானக்கொலை வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சி எஸ். தர்மலிங்கம் மறுவிசாரணை செய்யப்படுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இன்றைய விசாரணையின் போது எதிரிகள் சார்பில் வழக்கறிஞர்கள் எவரும் ஆஜராகியிருக்கவில்லை. தவணை வழங்க எதிரிகள் கோரியதை நீதிபதி நிராகரித்தார்.

சாட்சி தர்மலிங்கம் மேலும் கூறியதாவது:-

நல்லூரில் முதல் எதிரியுடன் 5,6 தினங்கள் தங்கியிருந்த வேளையில் இருவரும் சாப்பாடு தனித்தனியாகவும், ஒரே இடத்தில் சில நேரம் கூட்டாகவும் எடுத்துள்ளேன். சுன்னகம் பொலிசுக்கு முதல் எதிரி எழுதிய கடிதத்தை விட வேறு தபால் அவர் எழுதியதை நான் காணவில்லை. காசு பற்றாக்குறை காரணமாக சாவகச்சேரியிலிருந்து செல்ல தான் அணிந்திருந்த ஷேர்ட்டை முதல் எதிரி விற்றுப் பணம் பெற்றுர். பத்திரிகையில் வெளிவந்த கொலையுண்ட ஸ்ரீ காந்தன் புகைப்படத்தை கிளிநொச்சியில் வைத்து எனக்கு சுட்டிக்காட்டி தான் கொலை செய்த நபர் இவர் தான் என அடையாளம் காட்டினர். 1 ம் எதிரியும் 2 ம் எதிரியும் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகவும், தனித்தனியாகவும் திரிவதைக் கண்டுள்ளேன். கிளிநொச்சியிலிருந்து 1 ம் எதிரியுடன் யாழ்ப்பாணம் வந்தபோது அவர் கடுதாசிபை ஒன்று வைத்திருந்ததை அவதானித்தேன். பைக்குள்ளே சேர்ட் சாரம், சவர்க்காரம், பஞ்சு போன்ற பொருட்களை வைத்திருந்தார்.

சுகாதார பரிசோதகர் எஸ். கனகரத்தினம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

27.5.69ல் வழக்கம்போல் குப்பை கொட்டுவதை மேந்பார்வை செய்ய சுன்னகம் மயானம் சென்றிருந்தேன். மயான குப்பை மேட்டில் கருகிய நிலையில் இறந்தவரின் சடலமொன்று கிடந்ததைக் கண்டு சுன்னகம் பொலிஸில் தகவல் கொடுத்தேன். இரவு காவலாளர்கள் மயானத்திற்கு நியமிக்கப்பட்டிருப்பதில்லை.

முதல் எதிரியின் தாயார் தம்பு பெண் இளையபிள்ளை வயது 65 தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

மயானத்தில் கருகிய சடலம் காணப்பட்ட தினம் ஞாபகமிருக்கின்றது. அன்றைய தினம் நான் வீட்டில் இருந்தேன் இதற்கு முதல் இரவு 1 ம் எதிரி எனது வீட்டுக்கு வரவில்லை. நான் அவரைக் காணவுமில்லை. இக் கொலை சம்பந்தமாக ஆனிமாதம் 3ந் திகதிபொலிஸிற்கு வாக்குமூலம் கொடுத்துள்ளேன் வைகாசி மாதம் 26ந் திகதி இரவு கணவன் மதுவருந்த வீட்டைவிட்டுப் போய்விட்டார். நானும் பேரப்பிள்ளைகளும்சாப்பாடு முடித்துவிட்டு இரவு 8-30 மணிககு படுக்கைக்குபோயிருந்தோம். நாய் குரைத்து சுமார் 11 மணிக்கு கேட்டது. 1ம் எதிரி எனதுவீட்டு வளவுக்குள் நின்றதைக் காணவில்லை. நாய் குரைத்தபோது படுக்கையை விட்டு எழும்பவில்லை. 1ம் எதிரி வீட்டிலிருந்து கோடரியை எடுத்துச் செல்லவில்லை. கோடரியை அவர் எடுக்கையில் நான் தடுத்ததாகக் கூறப்படுவதை மறுக்கின்றேன் முதலாம் எதிரி நான் தடுத்தபோது என்னைதள்ளி நிலத்தில் விழுத்தியதாகக் கூறப்படுவதையும் மறுக்கின்றேன் மருமகள் தவமணி அன்றைய தினம்இரவு வீட்டுக்கு வரவில்லை மயானத்தில் கிடந்த சடலத்தை தூரத்தில் நின்று பார்க்கவில்லைஎனதுகணவன் தோட்டத்திற்குள் கோடரியை மறைத்து வைக்கவில்லை கோடரியைப் பொலிசார் கண்டு எடுத்தபோது நான் பொலிஸ்பாதுகாப்பில்இருந்தேன்

(4-ம் பக்கம் பார்க்க)

...மன்றம் நிராகரித்தது. இந்திரா சர்வாதிகாரியாகமுனைகிருர் என திரு காபூல் வாதாடினர்.

### ஜெரூசலம்

தீயினல் சேதப்பட்ட ஜெருசலத்திலுள்ள பழமையும் புராதன சிறப்பும்மிக்க முஸ்லிம் மசூதியைச் சுற்றி இன்று அராபிய இனத்தவர் ஆர்ப்பாட்டம் நடத்தினர் இத் தீச் சேதம் சம்பந்தமாக விசாரணை நடத்த 5 பேர் கொண்ட விசாரணைக் கமிஷனை இஸ்ரேல் பிரதமர்திருமதி மேயர் நியமித்துள்ளார் இத் தீ வேண்டுமென்றே நடத்தப்பட்டசதிவேலையென அராபிய நாடுகள் குற்றம்சாட்டியுள்ளன,

### தென்வியட்னும்

தென் வியட்னும் பிரதமர் திரு சொன்வாங் குவாங் ராஜினமா செய்துள்ளார், புதிய மந்திரிசபை அடுத்த வாரத்தில் பதவியேற்கவிருக்கிறது. நாட்டின் நலன் கருதியே இவர் ராஜினமாச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது திரு குவாங்குக்கு வயது 69.

### செக்கோஸ்லவேக்கியா

செக்கோஸ்லவேக்கியாவில் சோவியத் வார்சோ ஒப்பந்த நாடுகள் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த 600 பேர் கைது செய்யப்பட்டனர்.

### ஐக்கிய அரபு குடியரசு

நட்பு நாடுகள் என்ற வரிசையில் ஐக்கிய அரபுக் குடியரசு வெளியிட்டுள்ள நூல் தொகுப்புகளில் இலங்கைக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நூலில் இலங்கை பற்றிய விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கை பிரதமரின் படமும் இருக்கின்றது.

## மரண அறிவித்தல்

### அக்னெஸ்

சில்லாலையைச் சேர்ந்த லோறன்ஸ் கைம்பெண் அக்னெஸ் காலமாகிவிட்டார். இவர் வணபிதா லோறன்ஸ் சேவியர் கட்டளைக்குரவர், வங்காலை பெனடிக்ற் ஆசிரியர் மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை, பிலோமினவின் அருமைத் தாயாருமாவர். இவரின் பூதவுடல் சில்லாலை ஆரோக்கிய மாதா கோயில் சேமக்காலையில் 23-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். உறவினர்களும் நண்பர்களும் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும். 1442

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். நகரில் பிரபல்யமான வர்த்தக ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த கௌண்டர் கிளாக்கும்; ரூபா 5000/- பிணைப்பணம் கட்டக்கூடிய காஷியரும் தேவை. திறமைக்கேற்ற சம்பளமும், பிணைப்பணத்திற்கு நியாயமானவட்டியும் வழங்கப்படும். விபரங்களுடன் விளம்பர இல. 1341, மே/பா; 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 31-8-69 க்கு முன் விண்ணப்பிக்கவும். 1341

### விற்பனைக்கு

60 ஏக்கர் காடு உறுதிக் காணி தனிக்குளத்துடன். குளம் பழுது பார்க்கவேண்டும். நெற் செய்கைக்குச் சிறந்தது. நெடுங்கேணியிலிருந்து 3 1/2 மைலுக்குள்ளே உள்ளது. பரப்பு ரூ 15/-, வேப்பங்குளம் வவுனியா நகரசபை எல்லைக்குக் கிட்ட மன்னார் ரோட்டிலிருந்து 1/2 மைலுக்குள்ளே 5 ஏக்கர் திருத்தப்பட்ட காணி நடுத்தர வகுப்பிலுள்ளது மாற்ற முடியும். விளம்பர இல. 1342, C/o 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம் 1342

## திருமண அழைப்பு

திரு. ரி. முருகேசுவும் (கூட்டுறவுப் பரிசோதகர், தெல்லிப்பளை) பாரியாரும், கட்டுடை திரு. ராஜாவின் புத்திரன் திரு. ஆர். சிவனேசனுக்கும் (அமைப்புப் பொறியியலாளர், மான்செஸ்டர், இங்கிலாந்து) தமது புத்திரி செல்வி மனோகரிதேவிக்கும் 25-8-69ந் திகதி பிற்பகல் 9-00—10-00 மணிக்கிடையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் திருமண வைபவத்திலும் 26-8-69 மாலை தெல்லிப்பளை காங்கேசன்துறை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் வரவேற்புபசாரத்திலும் கலந்துகொள்ளும்படி நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர். 1343

### கல்வி

சிங்களம் (6 மாதத்தில் 5-ம் வகுப்பு தராதரம்) றேடியோ, மின்சார வேலைகள் கற்க, யாழ்ப்பாண தொழில்நுட்ப பாடசாலை, 438, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (இராசாவின் தோட்டசந்திக்குக் கிழக்கே) காலை, மாலை வகுப்புகள். 1340

### தேவை

பதவி

S. S. C. (English) தராதரப்பத்திரம் உடையவரும், நுகர்ச்சிப்பொருள் கொள்வனவு, மொத்த வியாபாரம் முதலியவற்றில் ஐந்து வருடத்திற்கு மேல் சிறந்த அனுபவமுடையவரும், காரியாலய அனுபவம், கணக்குப் பதிவியல், ஆங்கிலத் தட்டெழுத்துத் தெரிந்த நடுத்தர வயதுடைய ஒருவருக்குத் தகுந்த பதவி யாழ்ப்பாணக் குடாநாட்டில் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம். இவரது சேவையைப் பெறவிரும்பும் ஸ்தாபனம் விண்ணப்பிக்கவும். Advt. No. 1344, C/o. ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1344

## காரியாதிகாரி இரத்ததானம்

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி மாணிக்கம் நடராசா இரத்ததானம் செய்தார். வலிமேற்கு காரியாதிகாரி கந்தோரில் இரத்தம் சேர்க்கும் வைத்தியர்கள் நேரடியாக வந்து எடுத்தனர். மேற்படி கந்தோரைச்சேர்ந்த ஏழு ஊழியர்கள் இரத்ததானம் செய்தனர்.

## மிளகாய்க்கு ஏற்பட்டகதி

விஸ்வமடு, வெள்ளி

நேற்றுத்திடீரெனப்பெய்தமழையினால் இப்பகுதி விவசாயிகள் பலருக்கு பலத்த நஷ்டம் ஏற்பட்டது. தங்கள் வசமிருந்த மிளகாய்களை வெய்யிலில் காயப்போட்டிருந்தபோது பெருவெள்ளம் போட்டு விட்டதாகவும், வெள்ளம் மிளகாயை அள்ளிச்சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது.

## கேள்வி விளம்பரம்

புலோப்பளைக் கிராமச் சபை அக்கிராசனரால் கீழ்க் குறிப்பிட்டிருக்கும் வேலைகளை செய்வதற்கு சீல் வைத்த கேள்விகள் பதிவுத் தபால் மூலம் 9-9-69 பகல் 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் ஒவ்வொரு வேலைக்கும் ரெண்டு பிணையாக ரூபா 25/-ம் கேள்விப் பத்திரப் பணம் ரூபா 5/-ம் கட்டவேண்டும். கேள்விப் பத்திரப் பணம் ரூபா 5/-ம் திருப்பிக் கொடுபடமாட்டாது. கேள்விப்பத்திரங்கள் 8-9-69 பகல் 12 மணி வரை வழங்கப்படும். வேலையின் விபரங்களை இக்கிராம சபைக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

### வேலைகள்

1. சோறன்பற்று சிராவி ரோட்டு அமைத்தல்.
2. சந்தை மதில்.

ஒப்பம்:
அ. ஜோ. இராசசூரியர்,
அக்கிராசனர்,
புலோப்பளைக் கிராமசபை.

புலோப்பளைக் கிராமசபை,
பளை,
21-8-69. 1715

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 23—8—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 கதம்பஇசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம். 5-45 படத்திலிருந்து. இரவு 6-15 புல்லாங்குழல், கிளாரினட்,

வலி.மேற்கு

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாம் பிரிவினர் நடாத்திய விளையாட்டுப் போட்டி முடிவுகள் சில:-

800 மீற்றர் ஓட்டம் (கீழ்ப் பிரிவு)- ரி. கணேசலிங்கம், ஆர். இராசேந்திரன், ஏ. திசங்கேஸ்வரன்.

மேற்பிரிவு: வி. தில்லையம்பலம், ஏ. றவிசேன. ஈ. ஜெயவீரசிங்கம்.

பந்து எறிதல் மேற்பிரிவு (பெண்): கே. உருக்குமணி தேவி, ஏ. மகேஸ்வரி, கே. மங்களகுமாரி.

குண்டு எறிதல் (மேற் பிரிவு)- இ. புவிராசசிங்கம், வி. விக்கிரமசிங்கம், எஸ். இரத்தினசபாபதி,

கீழ்ப்பிரிவு; எம். குலசிங்கம், கே. தனபாலசிங்கம், ரி. சிவபாதம்.

நிதான ஓட்டம் (மேற் பிரிவு பெண்)- கே. உருக்குமணிதேவி, கே. மங்களகுமாரி ஏ. மகேஸ்வரி.

கீழ்ப்பிரிவு (பெண்)- எஸ். சரஸ்வதி, இ. புஷ்பராணி, கே. முத்தீஸ்வரி.

200 மீற்றர்ஓட்டம் (கீழ்ப் பிரிவு)- எம். சக்திகுரு, எம். பரதிதாசன், எஸ். தெய்வேந்திரன்.

## மாட்டுவண்டி சவாரி முடிவுகள்

சுழிபுரம், வெள்ளி

மூளாய் இளைஞர் விளையாட்டுக்கழகத்தினரால் பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலய விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட மாட்டு வண்டிப் போட்டி முடிவுகள் வருமாறு:-

சி பிரிவு

அ செல்லத்துரை(கொட்டக்காடு), த மயில்வாகனம் (அளவெட்டி). இ சின்னத்துரை (கட்டுவன்), இ கனகரத்தினம்(அளவெட்டி)

பி பிரிவு

இ பொன்னம்பலம் (மூளாய்), பரமு சண்முகநாதன் (மீசாலை, இ நகுலேஸ்வரன் (மூளாய்), க செல்வரத்தினம் (மூளாய்)

ஏ பிரிவு

சி சோமசுந்தரம் (பொன்னாலை), இ. குணரத்தினம் (மாதகல்) போ சங்கரப்பிள்ளை (மயிலிட்டி)

விசேஷ பரிசு ஏ பிரிவு

சி வல்லிபுரம்

## தற்காலிக வேலைநீக்கம்

## வளர்மதி விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டி வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தவிளையாட்டுப்போட்டி வல்வெட்டித்துறை பட்டினசபை உபதலைவர் திரு. நா. பாக்கியலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது.

உடுப்பிட்டி எம். பி.யும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பத்துமைல் மரதன் ஓட்டப்போட்டியும், புதையல் தேடும் போட்டியும் விஷேச நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன.

## அரசாங்க அதிபர் விஜயம்

அளவெட்டி, வியா.

வடமாகாண அரசாங்க அதிபர் மயிலிட்டி மீன்பிடித்துறை முகத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு நிலைமைபற்றி ஆராய்ந்தார்.

மயிலிட்டியில் நிறுவப்பட்டுவரும் மீன்பிடித்துறை முக எல்லைகளில் ஏற்பட்ட தகராறு காரணமாக மீன்பிடித்துறை முகவேலை இடையில் திருத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

மேற்படி நிலையத்துக்காகபீரெஞ்சுக்குழுதீர்மானித்தபடி அல்லாமல் மூ யப்பர்மூதல் திருப்பூர் ரேட்டுக்குகிழக்கு வரை என்றஎல்லையை மேலும்விஸ்தரித்து திருப்பூர் பக்கம் வரை நீட்டும்படி திருப்பூர் மக்கள்கோரிக்கை விடுத்திருந்தனர்.

## ஈழத்துச்சங்கு ஏற்றுமதியாகும்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஈழத்துக் கடற்சங்குகள் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதியாகவிருச்கின்றன. இது சம்பந்தமாக இலங்கை வந்துள்ள பாகிஸ்தானைச் சேர்ந்த குழுவொன்று மன்னார், விடத்தலதீவு, ஊர்காவற்றுறை முதலிய இடங்களுக்குச் சென்று சங்குகளைப்பார்வையிட்டதுடன் அவற்றைக் கொள்வளவு செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது. சங்குகள் தொடர்ந்து கொள்வனவு செய்யப்பட்டு பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படுமெனத் தெரிகிறது.

## இந்த ஆயுள்வேதவைத்திய நிலையங்கள் மூடப்படலாம்

சுழிபுரம், வெள்ளி

உள்ளூராட்சி மன்றங்களினால் நடாத்தப்பட்டு வரும் சில ஆயுள்வேத வைத்திய சாலைகளுக்கு இக்கட்டான ஒரு நிலை ஏற்படலாமென அஞ்சப்படுகிறது. சில ஆயுள்வேத வைத்திய சாலைகளுக்கு அரசாங்கம் அளித்து வரும் நன்கொடைப்பணத்தை அரசாங்கம் வழங்காமல் நிறுத்திக்கொள்வது குறித்து யோசனை செய்து வருகிறது.

அரசாங்க வைத்தியசாலைகள் உள்ள இடங்களிலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகள் சம்பந்தப்பட்ட விபரங்களை அரசாங்கம் இப்போது கோரியுள்ளது. அரசாங்கத்தின் நிதிநிலைமையைச்சமாளிக்கவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

## பொலிஸ் பாதுகாப்புடன் நெடுந்தீவு படகு சேவை

யாழ்ப்பாணம், சனி


குறிகாட்டுவான்- நெடுந்தீவு படகுப் போக்குவரத்துச் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. பொதுமராமத்து இலாகா ஊழியர்களான படகுச் சிப்பந்திகளுக்கும், கொந்தராத்துக் காரருக்குமிடையேஏற்பட்டதாகக் கூறப்படும் தகராறு காரணமாக ஊழியர்கள் சில தினங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால் தபால் சேவையும் ஸ்தம்பித்திருந்தது

நேற்றுமுன்தினம் மீண்டும் ஆரம்பமான படகுசேவை பொலிஸ் பாதுகாப்புடன் நடைபெறுகிறது. தகுந்த பாதுகாப்பின்றி கடமையாற்ற முடியாதென ஊழியர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்தே பொலிஸ் காவல் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நெடுந்தீவு படகுசேவையையும், அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை படகு சேவையையும் ஒன்றுகஇணைத்து பொதுமராமத்து இலாகாவினர் கொந்தராத்துக் கொடுக்காமலேயே சேவைகளை நடத்த வேண்டுமென்று அனலைதீவு, நயினாதீவு பிரயாணிகள் சங்கங்கள் தீவுப்பகுதி எம்.பி. மூலம் போக்குவரத்து அமைச்சரிடம் வற்புறுத்தி வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.


ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த
எங்க ஊர் ராஜா

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபிராணி
நடித்த
விஜயா: சுரேஷ் கம்பைன்ஸ்
குழந்தைக்காக
கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

யாழ் வின்ஸர்
தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம், ராஜன், புஷ்பலதா, சிவகுமார், கீதாஞ்சலி, நாகேஷ், அஞ்சலிதேவி
நடித்த

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம்.ஜி.ஆர்.-பத்மினி
நடித்த
ராணி சம்யுக்தா

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை10-30
எம்.ஜி.ஆர். - பத்மினி
நடித்த
காஞ்சித் தலைவன்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45
Poya, Pre-Poya 4 Shows
7 WINCHESTER
FOR
A MASSCRE

"சுமிட்டோமோ"
" SUMITOMO "
யப்பான் நைலோன் டயர் டியூப்புகள்
எங்களிடம் வெள்ளை வர்ணம்பூசப்பட்ட கீழ்க் காணும் அளவுகளைக் கொண்ட டயர் டியூப்புகள் விற்பனைக்குண்டு. மேலும் இந்த டயர்கள் டியூப் இல்லாமலும் அல்லது போட்டும் பாவிக்கக் கூடியவை.

| | | |
|---|---|---|
| 5.60 X 13 | 6.40 X 15 | 5.25 X 16 |
| 5.90 X 13 | 6.70 X 15 6Ply | 6.00 X 16 6Ply |
| 5.90 X 14 | 7.00 X 15 | 6.00 X 16 Jeep |
| 5.60 X 14 | 7.50 X 15 | 7.00 X 17 8Ply |
| 5.90 X 15 | 7.50 X 16 | 7.00 X 17 10Ply |
| | 7.50 X 17 8 Ply | 7.00 X 20 |

சேகரம் அன் சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, - யாழ்ப்பாணம்.
1711




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



சிவகுமார்,
கீதாஞ்சலி, நாகேஷ்,
அஞ்சலிதேவி

நடித்த

# பால்குடம்

அத்துடன் விண்வெளிக்கலம்' அப்பல்லோ - 10 ன் பயணக் காட்சி 10 நிமிடங்களுக்கு காண்பிக்கப்படும்.

## திங்கள் 25-8-69 முதல்

யாழ்நகர் **வெலிங்டன்**

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயா தினங்களில்
காலை 10-30 மணிக்கு மெட்னி
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
எல். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணாநிதி
பாலமுரளி கிருஷ்ண ★ கீதாஞ்சலி
வாணிஸ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்

# பக்த பிரகலாதா

(ஈஸ்ட்மென் கலர்)

| | | |
|---|---|---|
| கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | விஜயா (மட்டுநகர்) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) 2-30, 6-30, 9-30 | ராஜ் (நீர்கொழும்பு) | ஸ்ரீகிருஷ்ண (திருமலை) |

எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
நடித்த

# கணவன்

காஞ்சித் தலைவன்

**MANOHARA**
**JAFFNA**
Daily 4-45, 7, & 9-45
Poya, Pre-Poya 4 Shows
7 WINCHESTER
FOR
A MASSCRE
(Color & Scope)

**REGAL** **JAFFNA**
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
James Mason,
Alan Bates
in
GEORGY CIRL
(Adults only)

344 மீ அன் 61 மீ
மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம். 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 புல்லாங்குழல், கிளாரினட், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்நாடகஇசை, 7-35 மெல்லிசை, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

(மாதகல்) போ சங்கரப்பிள்ளை (மயிலிட்டி)
விசேஷ பரிசு ஏ பிரிவு
சி வல்லிபுரம்

## தற்காலிக வேலைநீக்கம்

மன்னார், வெள்ளி
கிராம சேவகர் ஒருவரை மன்னார் அரசாங்க அதிபர் தற்காலிக வேலைநீக்கம்செய்தார். மன்னார் ஆஸ்பத்திரி அற்றண்டன் ஒருவரும் நோயாளி ஒருவரைத் தாக்கியது சம்பந்தப்பட்ட புகாரில் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டார்.

ந்து கொள்வனவு செய்யப்பட்டு பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படுமெனத் தெரிகிறது.

74, ஆஸ்பத்திரிவீதி, - யாழ்ப்பாணம்.
1711





# அசுன்டோல்

## அவை அனைத்தையும் அழித்து விடுகின்றது

- கால்நடைகளின் வெளிப்புறத்தைப் பாதிப்புள்ளவற்றைக் கட்டுப்படுத்த மிகத் திறமையான—சிக்கனமான முறை
- எல்லா விலங்கினங்களுக்குமென பாதுகாப்பான வெளிப்பூச்சு மருந்து
- நச்சு ஈக்களைக் கட்டுப்படுத்தவென விசேஷமாக சிபார்சு செய்யப்பட்டது.
- டிடிரி, பிஎச்சி, டொக்ஸாபேன், ஆர்சனிக் ஆகியவற்றுக்கு கட்டுபபடாத உண்ணிகள் அழிக்கலாம்
- உலகத்தின் பல பாகங்களிலும் பரிசோதித்து நிருபிக்கப்பட்டது

- கால் நடைகளைப் பற்றியுள்ள நச்சு ஈக்கள், பூச்சி வகைகள் முதலியன



- கோழிகளைப் பற்றியுள்ள நச்சு ஈக்கள், தெள்ளுப் பூச்சி முதலியன



- ஆடுகளிலும் செம்மறியாடுகளிலும் பற்றியுள்ள நச்சு ஈக்கள். தெள்ளுப்பூச்சிகள்



- பன்றிகளைப் பற்றியுள்ள தெள்ளுப்பூச்சி முதலியன



- நாய்களையும் பூனைகளையும் பற்றியுள்ள நச்சு ஈக்கள், தெள்ளுப்பூச்சி முதலியன



ஹேலீஸ் லிமிடட்
எல்லாப் பிரபல மருந்துக் கடைகளிலும் மற்றும் பின்வருமிடத்திலும் அசன்டொல் கிடைக்கும்:-
மருந்தகப்பகுதி

BAYER
**ஹேலீஸ் லிமிட்டட்**
400, டீனஸ் ரோட், கொழும்பு-10.
தபால் பெட்டி 70, தொலைபேசி: 96333
HAYLEYS






# ராணிக்கு ஒரு தோழி!

உங்கள் மேனியின் கட்டிளமைக் கவர்ச்சியைக் காத்து வரும் ராணி சந்தன சோப்புக்குத் தோழியாக விளங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் பவுடர் ராணி சந்தன டல்கம் பவுடர்.

தூய சந்தனத்தின் குளுமையையும் பொன் வண்ணப் பொலிவையும் உங்கள் மேனிக்கு நாள் முழுதும் தருவன-

**ராணி** சந்தன சோப்,
சந்தன டல்கம் பவுடர்.

இவை இரண்டும்
சுவதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் தயாரிப்புகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் இந்திரா மீது நடவடிக்கை எடுத்தால் காங்கிரஸ் கட்சியில் பெரும் பிளவு ஏற்படும்?

## 'நோட்டீஸ்களை' வாபஸ் பெறுவதற்கு நிஜலிங்கப்பா தொடர்ந்து மறுப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 22

**ஜனாதிபதி தேர்தலின் போது சுதந்திரமாக வாக்களிக்கும் படி எம். பி.க்களையும் எம். எல். ஏ.க்களையும் தூண்டியதற்காகப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி மீதோ அல்லது மாநில மந்திரிகள் மீதோ எதுவித நடவடிக்கையும் எடுக்கவேண்டாம் என்று பல மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பாவைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.**

ஜனாதிபதி தேர்தலை யொட்டி இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி காங்கிரஸ் கட்சியிலுள்ள இடதுசாரிகளும் வலதுசாரிகளும் நேற்றிரவு தனித்தனியே கூடி ஆலோசனைகள் நடத்தியதாகத் தெரிகின்றது.

பிரதம மந்திரி மீதோ அல்லது வேறெந்த மந்திரி மீதோ நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டால் கட்சியில் பெரும் பிளவுக்கு அது வழிகோலும் என்று திருமதி காந்தியுடன் நெருங்கிய தொடர்புகொண்ட வட்டாரம் ஒன்று நேற்றிரவு கூறியது.

மகாராஷ்டிரா, பஞ்சாப் அஸ்ஸாம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரஸ் எம். பி.க்கள். எம். எல். ஏ.க்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் காங்கிரஸில் பிளவு ஏற்படக்கூடிய நடவடிக்கை எதிலும் ஈடுபடவேண்டாம் என்று காங்கிரஸ் மேலிடத்தைக் கேட்டிருக்கிறார்கள். மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த சுமார் 100க்கு மேற்பட்ட காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் திரு. நிஜலிங்கப்பாவுக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில் மத்திய மந்திரிகள் மீதோ அல்லது மாநில மந்திரிகள் மீதோ கட்சியிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவேண்டாம் என்று கேட்டிருக்கிறார்கள்.

பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, திரு. ஜகஜீவன்ராம், திரு. பக்ருதீன் அலி அகமத் ஆகியவர்களுக்கு விடுத்திருக்கும் 'நோட்டீ'சுகளை வாபஸ் பெறும்படியும் பல அங்கத்தவர்கள் கோரியிருக்கிறார்கள்.

## நடவடிக்கை எடுக்க 50 எம். பிக்கள்வற்புறுத்து

பிரதமர் மீதும் இதர மந்திரிகள் மீதும் நடவடிக்கை எதையும் எடுக்க வேண்டாமென்று பல எம். பி.க்களும் எம் எல். ஏ.க்களும் திரு. நிஜலிங்கப்பாவை வற்புறுத்திக்கொண்டிருக்கும் அதே வேளையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி சுமார் 50 காங்கிரஸ் எம். பி.க்கள் கேட்டிருக்கிறார்கள். கட்சியில ஒழுங்கை நிலைநாட்ட கட்சியின் கொட்பாடுகளுக்கு விரோதமாக நடந்துகொண்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும் என்று இந்த எம். பி.க்கள் திரு. நிஜலிங்கப்பாவைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

## கிரிக்கு நாடு முழுவதும் பாராட்டு வைபவங்கள்

ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் வெற்றிபெற்ற திரு. கிரியைப் பாராட்டி நாடு முழுவதும் வைபவங்கள் நடைபெறுகின்றன. வெற்றி பொது மனிதனின் வெற்றி என்று இந்தக்கூட்டத்தில் பலரும் விளக்கினார்கள்.

## சவேரியார் திருநாள்

நாகர்கோவில், வெள்ளி

நாகர்கோவில் அர்ச். சவேரியார் திருநாள் 19-ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. 23-ம் திகதி நடைபெறும் சுற்றுப் பிரகாரத்துடனும் 24-ம் திகதி காலை பாடற்பூசையுடனும் திருநாள் முடிவடையும். வண. அ. லெபோன் சுவாமியார் ஆராதனையை நடாத்தி வருகின்றார்.

### சங்காபிஷேகம்

சித்தங்கேணி, சனி

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் இன்று ஆவணிமூல சங்காபிஷேகம் நடைபெறுகின்றது. பகல் 1008 சங்குகளால் சுவாமிக்கு அபிஷேகமும், இரவு பூந்தண்டிகையில் உயர்தர மேளக்கச்சேரிகளுடன் சுவாமிவீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறும்.

## பௌர்ணமி கலைவிழா

மானிப்பாய், வெள்ளி

இம்மாதம் 27-ந்திகதி யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கும் பூரணை கலைவிழாவில் தேன்மதிகலாலயத்தின் "சந்திரனில் நால்வர்", அரியாலை திடீர் நாடக மன்றத்தின் "அபசகுணம்" ஆகிய நாடகங்களும் மட்டக்களப்பு ஜெயம் கித்தார் குழுவினரின் வாத்திய இசையும் இடம் பெறவிருக்கின்றன. — —

## 'அரிசி ஏற்றுமதி செய்வோம்'

—பிலிப்

கோட்டை, வெள்ளி

## இந்திராவுக்கு யோசனை கூறியது பற்றி காமராஜர்

புதுடில்லி, அகஸ்ட் 22

திரு. மொரார்ஜி தேசாயிடமிருந்து நிதிஇலாகா பொறுப்பைப் பிரதமரே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று தாம் யோசனைகூறியதுபற்றி திரு. காமராஜ் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

நிதி இலாகா பொறுப்பை பிரதமரே ஏற்றுக் கொள்ளலாம் என்று நான் அவருக்கு யோசனைகூறினேன். 10 அம் சத்திட்டத்தை தேசாய் எதிர்த்து வந்ததாகப் பிரதமர் கூறியதைத் தொடர்ந்து கட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவை அமுல்நடத்தாமல் இருப்பதற்கு இதைக்காரணமாகப் பயன்படுத்தலாம் என்று கருதி நிதி இலாகாவைப் பிரதமரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னேன். அதற்காக நிதி இலாகாவை அனுபவமிக்க தேசாயிடமிருந்து கண்ணியமற்ற முறையில் எடுத்துக்கொண்டது நியாயம்தான் என்று கூறுவது பொருந்தாதுஎன்றுதிருகாமராஜ்குறிப்பிட்டிருக்கிறார்.

### துக்கநாள்

ஜனாதிபதிதேர்தலில் திரு. சஞ்சீவரெட்டி தோற்றுவிட்டதாக செய்திகிடைத்ததும், காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா இன்று காங்கிரஸிற்கு துக்கநாள் என்று கூறினாராம்.

### எம். ஜி. ஆர். வாழ்த்து

திரு. கிரி வெற்றி பெற்றதைப்பாராட்டி நடிகர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் எனது இதயம்கலந்த வாழ்த்து' என்று தந்தியடித்தார்.

### நம்பிக்கையில்லா பிரேரணை

பிரதமர் திருமதி இந்திரா காந்திமீது பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு சுதந்திராகட்சியும் ஜனசங்கட்சியும் முயற்சிகள் செய்து வருகின்றன

### நந்தா எதிர்ப்பு

பிரதமர் இந்திராகாந்தி மீது நடவடிக்கை எடுப்பதற்கு பழைய மந்திரி திரு குல்சாரிலால்நந்தா எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். திரு நிஜலிங்கப்பாவுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், இப்போது காங்கிரஸ் எதிர்நோக்கியுள்ள ஒரு நிலைமைக்கு உண்மையான காரணம் என்ன என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும். அதைச் சீர்படுத்துவதற்கான வழியைக் கண்டுபிடிக்கவேண்டும். அப்போதுதான் காங்கிரஸ்கட்சியை அழிவிலிருந்து காப்பாற்றமுடியும் என்று தெரிவிக்கிறார்.

காங்கிரஸ்சார்பில் ஜனாதிபதி தேர்தலில் ஒருவேட்பாளரை தேர்ந்து எடுக்க காங்கிரஸ் மேலிடத்துக்கு என்ன அதிகாரம் இருக்கிறது இப்படி அதிகாரம் கொடுக்கும் சம்பிரதாயம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை கட்சியின் நலன்களை காப்பாற்றும் முக்கிய பொறுப்பை நீங்கள் மறந்துவிட்டு ஒரு கலாக்கூட்டத்தின் தலைவன் போல் நடந்துகொண்டு இருக்கிறீர்கள் என்று நந்தா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

உங்களுடைய செய்கையால் இந்தத்தேசத்தின் பிரதம மந்திரி பதவிக்கே பெரும் தீங்கு உண்டாக்குகிறீர்கள், இந்திராவை விரட்டுவதேஉங்கள் நோக்கமாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார் திரு. நந்தா.

# நீதிமன்றத்திலே

— நமது மல்லாகம் நிருபர் —

### 2 வருடக் கடூழியம்

கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்திய குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து எதிரிக்கு இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை

மூளாயைச் சேர்ந்த எஸ். சிவராமலிங்கம் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ய எத்தனித்ததாக எஸ். தவராஜா என்பவர்மீது இவ்வழக்கு சங்கானைப் பொலிஸாரால்

## சங்கீதவித்துவான்



சென்னை மத்திய கர்நாடக இசைக்கல்லூரியினர் நடாத்திய சங்கீதவித்துவான் பரீட்சையில் கோப்பாயைச் சேர்ந்த செல்வி பாலாம்பிகை பரமசாமிக்குருக்கள் வயலின் இசையில் 2ம் பிரிவில் சித்தி பெற்றுள்ளார். இவர் கோப்பாய் ரசிக கலாமன்றத்தில் கலைமணி சோமாஸ்கந்த சர்மாவிடம் வயலின் இசை பயின்றபின் தமிழகம் சென்று வித்துவான் டி. என் கிருஷ்ணனிடமும், இசைப் பேராசிரியர் எம். எஸ். அநந்தராமனிடமும் வயலின் இசை பயின்றார்.

இவர் கோப்பாய் சிவஸ்ரீ வைரவநாதர் முத்துக்குருக்களின் பேத்தியும், சித்தங்கேணி சிவஸ்ரீ முத்துக்குருக்கள் குமாரசாமிக்குருக்களின் தம்பியார் சிவஸ்ரீ பரமசாமிக்குருக்களின் கனிஷ்ட புத்திரியுமாவார். செல்வி பாலாம்பிகையின் வயலின் இசை அரங்கேற்றம் நயினை நாகபூஷணி அம்பாள் சந்நிதானத்தில் நடைபெற்றது. தொடர்ந்து வயலின் இசையில் விசேஷ பயிற்சி (டிப்ளோமா) பெறுவதற்கு சென்னை செல்கின்றார். செல்வி பாலாம்பிகை, கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரியின் பழைய மாணவியுமாவர்.

## செய்திச் சுருக்கம்

### மேலும் நீடிக்கப்படும்

கோட்டைவெள்ளி

ஜி. ஸி ஈ. சாதாரணதரபரீட்சையில்தோற்றியமாணவர்களும் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இம்மாதம் 31ந் திகதிக்கு முன் தமது பூரண பெறுபேறுகள் கிடைக்கப் பெறாதவரை டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான விண்ணப்பப்

# இசைக் கச்சேரி



'சங்கீத ரத்தினம்' திருமதி கமலம் மகாலிங்கம்



செல்வி சௌந்தரவல்லி உமாமகேசன்

சிலாபம் முனீஸ்வரய தேவஸ்தானத்தில் நாளை இவர்கள் இன்னிசைக் கச்சேரி நடாத்துகிறார்கள். நாவற்குழி மகாவித்தியாலய இசை ஆசிரியை 'சங்கீத ரத்தினம்' திருமதி கமலம் மகாலிங்கமும், சுன்னாகம் இராமநாதன் இசைக் கல்லூரி சங்கீத வகுப்பு இறுதி ஆண்டு மாணவியுமான செல்வி சௌந்தரவல்லி உமா மகேசனும் இசைக்கச்சேரியை நடாத்துவர். கே. சித்திவிநாயகம் (வயலின்), எம். என். செல்லத்துரை (மிருதங்கம்), கோ. ஆத்மானந்தா (கஞ்சிரா) ஆகியோர் இவர்களின் சங்கீத நிகழ்ச்சிகளுக்கு பக்கவாத்தியம் வாசிப்பர்.

## 'இந்தியாவின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்திவிட்டது'

யாழ்ப்பாணம், சனி

"இந்தியாவில் வீசிய அரசியல் சூறாவளியில் இந்திரா உயர்த்திய போர்க்கொடி அவரின் புகழுடன் சேர்த்து பட்டொளி வீசச் செய்துள்ளது, இந்திய ஜனாதிபதி தெரிவு" என்று வடபகுதி கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கோ) செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த கல்விக் கிளைக் கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:

"அம்புலி மண்ணில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் காலடி எடுத்து வைத்த அதே தினத்தில் அன்னை இந்திரா வங்கிகளைத் தேசியமயமாக்கி ஏழைகளின் நல்வாழ்வுக்கு வித்திட்டார். இந்த நிகழ்ச்சி சந்திரனை வென்றதை விட மனித சரித்திரத்தில் முக்கியத்துவம் குன்றியது அல்ல.

(4ம் பக்கம்பார்க்க)

# இன்றைய பலன்

## சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

ஆவணி மாதம் 7ந் திகதி (23-8-69)

**மேஷம்-** நினைத்ததை முடிப்பதில் வெற்றியடைவீர்கள். சுற்றாடலில் புதிய மாற்றங்கள் தென்படும். மனதுக்கு இதமளிக்கும் சம்பவமொன்று நடைபெறலாம். புத்திர வழியாலும் புகழ் கிடைக்கும்.

**ரிஷபம்-** எந்த நடவடிக்கைகளையும் இரகசியமாக வைத்திருப்பது நல்லது. ஒற்றர்கள் உங்களுடன் உறவாடுவதற்கு முனைவர். விபத்துக்கு இடமேற்படுமாகையால் எந்த விடயத்திலும் நிதானத்துடன்இருக்கவும்.

**மிதுனம்-** கருத்தறிந்து நடப்பவர்கள் காலடியில் காத்திருப்பர். களஸ்திரவழியாலும் நிம்மதி கிடைக்கும். நெஞ்சம் மகிழ்ச்சியால் நிறையும். காதல்உலகில் கனிவான சம்பவங்கள் இடம்பெறும். சுபதினம்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிரிக்கு நாடு முழுவதும் பாராட்டு வைபவங்கள்

ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் வெற்றிபெற்ற திரு. கிரியைப் பாராட்டி நாடு முழுவதும் வைபவங்கள் நடைபெறுகின்றன. மேற்கு வங்காளத்தில் திரு. கிரியின் வெற்றியைப் பாராட்டி ஆர்ப்பாட்டங்களும், கூட்டங்களும் இடம்பெற்றன. மைசூரிலும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. புதுடில்லியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. கிருஷ்ணமேனன், ராமமூர்த்தி போன்றவர்கள் பேசினார்கள். திரு. கிரியின் வெற்றி பொது மனிதனின் வெற்றி என்று இந்தக்கூட்டத்தில் பலரும் விளக்கினார்கள்.

## டிட்டோ பாராட்டு

திரு. கிரி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டி செக்கோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ, கிழக்கு ஜெர்மனியின் அதிபர், ஈரான் மன்னர் ஷா, சிக்கிம் சோகியால் ஆகியோர் பாராட்டுச் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள்.

குழுவினரின் வாத்திய இசையும் இடம் பெறவிருக்கின்றன.

## ‘அரிசி ஏற்றுமதி செய்வோம்’

—பிலிப்

கோட்டை, வெள்ளி

உணவுற்பத்தியில் நாம் விரைவில் தன்னிறைவு பெறுவதுடன் நிற்கமாட்டோம். சில ஆயிரக்கணக்கான தொன் அரிசியையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கக்கூடிய நிலைக்குள்ளாவோம்” என்று கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன ஆட்சி மன்றத்தில் கூறினார்.

செக்கோஸ்லவாக்கியாவில்

# ஆர்ப்பாட்டத்தை அடக்க டாங்கிகள் வந்தன

# வெளிநாட்டு நிருபர்கள் வெளியேற்றப்பட்டனர்

பிராக் ஆகஸ்ட் 22

செக்கோஸ்லவாக்கியாவில் பிராக் நகரிலும் இதர பல நகர்களிலும் ஆர்ப்பாட்டங்களை அடக்க ராணுவத்தினர் டாங்கிகளை உபயோகிக்கிறார்கள்.

வார்ஸோ படைகள் ஆக்கிரமிப்பு மேற்கொண்ட வருடாந்த தினத்தையொட்டி ஆரம்பமான ஆர்ப்பாட்டங்களின் காரணமாக செக் அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை எடுத்தது.

ஆர்ப்பாட்டக் காரர்கள் சென்லெஸ்செஸ்டர் சதுக்கத்தையே முக்கிய இடமாகத் தமது ஆர்ப்பாட்டங்களுக்கு தெரிந்தெடுத்துள்ளன, மாணவ ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசாருடன் தெருக்களில் சண்டையிட்டார்கள்; பொலிசார் மீது கற்களை வீசினார்கள். பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை எறிந்தார்கள். ஆர்ப்பாட்டம் கட்டுக்கடங்காமல் போனதால் டாங்கிகள் கொண்டுவரப்பட்டன. துப்பாக்கிக் குண்டுகளால் இருவர் காயமடைந்தார்கள்.

செக் தலைவர்களையும் சோவியத் தலைவர்களையும் குறைகூறி செய்திகள் எழுதியதாகவும், விரும்பத்தகாத முறையில் நடந்துகொண்டதாகவும் பலர் செக்கோஸ்லாவாக்கியாவிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் ஏராளமானோர் வெளிநாட்டுப்பத்திரிகையாளர்கள் நியுயோர்க் டைம்ஸ்பத்திரிகையின் நிருபர் இதில் முக்கியமானவர்.

## 3 ஆயிரம் பேர் மரணம்

### ராஜஸ்தானில் பஞ்சம்

ஜெய்ப்பூர், ஆகஸ்ட் 22

ராஜஸ்தான் மாநிலத்தில் பஞ்ச நிலைமை ஏற்பட்டுள்ளது.

பட்டினி காரணமாக அங்கு 3,325 பேர் இறந்தார்கள். இந்தத் தகவலை ராஜஸ்தான் சட்டசபையில் சுகாதார மந்திரி திரு. சுந்தர் சர்மா வெளியிட்டார்.

## கி.ச உபதலைவர் தெரிவு

மானிப்பாய், வெள்ளி

மானிப்பாய்க்கிராமசபையின் இரண்டாவது வருட உபதலைவர் தெரிவு இம்மாதம் 26-ந்திகதி நடைபெறவிருக்கிறது.

## ஜீப் விபத்து

பருத்தித்துறை, வெள்ளி

நேற்றுமுன்தினம் செம்பியன்பற்றில் வீதி வேலை செய்து கொண்டிருந்த நாலு தொழிலாளரை ஒரு ஜீப் வண்டி மோதியதால் நால்வர் படுகாயமுற்றனர்.

எம். சிவனடி, எம். கந்தையா ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும் கரவெட்டியைச் சேர்ந்தகணபதி செந்திவேல் வரணியைச் சேர்ந்த தம்பு அருளானந்தம் ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியிலும் சிகிச்சைபெற்று வருகின்றனர். இருவரின் நிலைமை படுமோசமாயிருப்பதாகக் கூறப்பட்டது.

பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ், சின்னத்துரை தமது ஜீப்வண்டியுடன் பருத்தித்துறைப் பொலிசில் சரணடைந்தார்.

## திருத்தப்பட்டது

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்பு வடலியடைப்பு கிராம முன்னேற்றச்சங்கமண்டபம் திருத்தி அமைக்கப்பட்டது. கலாவல்லி நெசவுநிலைய மாணவிகளும், இவ்வூர் பிரமுகர்களும் திருத்த வேலையில் கலந்துகொண்டனர்

— நமது மல்லாகம் நிருபர் —

## 2 வருடக் கடூழியம்

கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்திய குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து எதிரிக்கு இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி தீர்ப்பளித்தார்.

கோட்டைக்காடு வாசியான வி. இராசையா என்பவருக்குக் கத்தியால் வெட்டிப் படுகாயம் விளைவித்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த எஸ். அப்புத்துரை என்பவர்மீது சுன்னாகம் பொலிஸார் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் எஸ். நடராஜா வழக்கை நடத்தினார்.

0 0 0

## 15 வயது வாலிபர் கைது

அச்சுவேலிப் பொலிஸார் பெற்றோமாக்ஸ் விளக்குக் களவு சம்பந்தமாக வசாவிளானைச் சேர்ந்த எஸ். ரஞ்சன் என்ற 15 வயது வாலிபரைக் கைது செய்து மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்தனர். நீதிபதி பிரஸ்தாப வாலிபரைப் பிணையில் செல்ல அனுமதித்து, மீண்டும் இம்மாதம் 25ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டுள்ளார்.

0 0 0

## கொலைமுயற்சி வழக்கு

பொலிஸ் கான்ஸ்டபிளைக் சுட்டுக்கொல்ல முயன்ற வழக்கு மேல்விசாரணை அடுத்த மாதம் 19ந் திகதிக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட்டினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொண்டமானாறு வாசியான எஸ். வடிவேலு என்றவருக்கு எதிராகச் சங்கானைப் பொலிஸார் இவ்வழக்கை, பொலிஸ் கான்ஸ்டபிள் சந்திரத்தினவைச் சுட்டுக்கொலைசெய்ய எத்தனித்ததாகத் தொடர்ந்துள்ளனர்.

0 0 0

## எதிரி பிணையில்

மூளாய் கொலை முயற்சி வழக்கு விசாரணை முடிவில் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி சுப்ரீம் கோர்ட் விசாரணைக்குப் பாரப்படுத்தியுள்ளார். எதிரியின் கைவிரல் அடையாளம் பதிவு செய்ய உத்தரவிட்டு எதிரியைப் பிணையில் செல்ல மாஜிஸ்திரேட் அனுமதித்துள்ளார்.

மூளாயைச் சேர்ந்த எஸ். சிவராமலிங்கம் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ய எத்தனித்ததாக எஸ். தவராஜா என்பவர்மீது இவ்வழக்கு சங்கானைப் பொலிஸாரால் தொடரப்பட்டுள்ளது.

## கல்விப் பகுதியின் தடுமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

விவசாய வட்டாரக் கல்வி வட்டாரக் கல்வியதிகாரிப் பதவிக்கு மனுப்பண்ணுவதற்காக மனுப்பத்திரம் கோரிய ஓர் ஆசிரியருக்குக் கல்விப்பகுதியினர் க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குரிய மனுப்பத்திரம் ஒன்றை அனுப்பியுள்ளனராம்.

குறிப்பிட்ட ஆசிரியர் மனுப்பத்திரத்தை திருப்பி அனுப்பியதுடன் கல்வி மேலதிகாரிகளுக்கும் இவ்வசம்பாவிதம் பற்றி முறையிட்டுள்ளார். இவ்வித தடுமாற்றங்கள் இதுவே முதல் தடவையாக நடக்கவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கரவெட்டி பாடசாலை எல்லைகள்

பருத்தித்துறை, வெள்ளி

கரவெட்டி பௌத்த தமிழ்ப்பாடசாலை நிலத்துக்கான எல்லைக் கற்கள் அரசாங்கப் பகுதியினரால் போடப்படவிருக்கின்றன. எல்லைக் கல் போடும்போது எவருக்கும் தலையிட உரிமை இல்லையென்றும், அவ்வாறு தலையிடுவோர் மீது மிகக்கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அரசாங்கம் சகல காணிப்பங்காளருக்குப் அறிவித்துள்ளது.

## புதிய நிர்வாகிகள்

அளவெட்டி, வெள்ளி

வலிவடக்கு ஐக்கியநாணயசங்க வருடாந்தக் கூட்டம் டாக்டர் திரு. நடராசா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் டாக்டர் ஏ. நடராசன், உபதலைவர் ஈ ஆர். முருகேசு, காரியதரிசி அ.த. சுப்பிரமணியம், பொருளாளர் எ. கந்தையா இதை அடுத்து நிர்வாகக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

...களும் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இம்மாதம் 31ந் திகதிக்கு முன் தமது பூரண பெறுபேறுகள் கிடைக்கப் பெருதவரை டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான விண்ணப்பப் முடிவு திகதி மேலும் நீடிக்கப்படலாமெனத் தெரிய வருகிறது,

0 0

## மீண்டும் விசாரணை

நிந்தாவூர், வெள்ளி

அடக்கம் செய்யப்பட்ட பிரேதமொன்று 3 தினங்களின்பின் தோண்டி எடுக்கப்பட்டு வைத்தியபரிசோதனை நடத்தப்பட்டது. நிந்தாவூரைச் சேர்ந்த 30வயது உமறு லெப்பை என்பவர் மரணமடைந்து பிரேதஅடக்கம் செய்யப்பட்டபின் கிராமசேவகரின் வேண்டுகோளைத் தொடர்ந்து கல்முனை நீதிபதி பிரேதத்தை தோண்டி எடுத்து விசாரணை செய்வதற்கு உத்தரவிட்டார்.

0 0 0

## ரூபா 10லட்சம் செலவில் தடாகம்

பேராதனை, வெள்ளி

பத்து லட்சம் ரூபா செலவில் கண்டியில் ஒரு நீச்சல் தடாகம் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கண்டியில் நடைபெறும் பெரஹராவையொட்டியகளியாட்ட விழா மூலம் சேகரிக்கப்படும்பணம் இதற்குப் பயன்படுத்தப்படுமாம். நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டதும் சர்வதேச நீச்சல் போட்டிகள் இங்கும் நடைபெறுவதற்கு வழிவகை மேற் கொள்ளப்படுமாம். இத்தகவலை கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற களியாட்ட விழா ஒன்றினைத் திறந்து வைத்துப் பேசிய கண்டி அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ ஜே. பெர்னாண்டோ தெரிவித்தார்.

## கிளிநொச்சி புதிய வைத்தியதிகாரி

பருத்தித்துறை, வெள்ளி

அங்கொடை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை இம் மாதம் 17ம் திகதிதொடக்கம் கிளிநொச்சிப் பகுதி வைத்தியஅதிகாரியாக மாற்றப் பட்டுள்ளார். இவர் அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், மல்லாவி, ஆனையிறவு, முறிகண்டி ஆகிய சகலபகுதிகளுக்கும் பொறுப்பாக இருப்பதுடன் மலேரியாத் தடுப்பியக்கத்திற்கும் தலைமை தாங்குவார்.

ரிஷபம்- எந்த நடவடிக்கைகளையும் ... வைத்திருப்பது நல்லது. ஒற்றர்கள் உங்களுடன் உறவாடுவதற்கு முனைவர். விபத்துக்கு இடமேற்படுமாகையால் எந்த விடயத்திலும் நிதானத்துடன்இருக்கவும்.

**மிதுனம்-** கருத்தறிந்து நடப்பவர்கள் காலடியில் காத்திருப்பர். களஸ்திரவழியாலும் நிம்மதி கிடைக்கும். நெஞ்சம் மகிழ்ச்சியால் நிறையும். காதல்உலகில் கனிவான சம்பவங்கள் இடம்பெறும். சுபதினம்,

**கடகம்-** நண்பர் ஒருவர் உங்களை ஏமாற்றுவார். கடன்தொல்லை சற்றுக் கடினமாக இருக்கும். மறைந்து விட்ட கடமையுணர்ச்சி மீண்டும் துளிர்விடலாம். உணர்ச்சிவசப்படாது நடந்துகொள்ளவும்.

**சிம்மம்-** வேதாந்த விவகாரங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம். இறைநம்பிக்கை மேலோங்கி நிற்கும். முன்னாள் ஆசிரியர் ஒருவர் உங்கள் உதவிக்கு முன் வருவார். புண்ணிய காரியங்களிலும் ஈடுபாடு ஏற்படும்.

**கன்னி-** புதிய நண்பர்களை வாழ்க்கையில் சந்திப்பீர்கள். எங்கும் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். வணிகர்களுக்கு சிறப்பான முன்னேற்றமுண்டு. சிலர் தனிக் குடித்தனத்தையும் ஆலோசிக்கலாம்.

**துலாம்-** முன்னேற்றமான பலன்களையே குறிக்கின்றது. பொருள்வரவு திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு ஊதியத்திலும் உயர்வு தென்படும். உடல்நலன் சிறப்பாக இருக்கும். எதிலும் உற்சாகமுண்டு.

**விருச்சிகம்-** எதிலும் மந்தநிலை தென்படும். உணவில் வெறுப்புணர்ச்சி தோன்றும். வாதவாய்வுச் சேட்டைகளுக்கும் இடமளிக்கலாம். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தோன்றாது பார்த்துக்கொள்ளவும்.

**தனுசு-** வேண்டாத பேச்சுக்களால் வினையைத் தேடிக்கொள்ளுவீர்கள். கடமையாற்றுமிடத்தில் கசப்பு மனப்பான்மை தோன்றக்கூடும். கூடியவிரைவில் நாவடக்கத்தைப் பேணிக்கொள்வது சிறப்பாகும்.

**மகரம்-** தேன்சிந்தும் பேச்சின் மூலம் மற்றவர்களை வசப்படுத்துவீர்கள். பகைவர்கள் மீண்டும் நண்பர்களாவார்கள். குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும். பொருளாதாரத்துறையில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்-** எதிர்பாராத தடைகள் உங்களை திகைக்க வைக்கும். வேண்டிய ஒருவர் உங்களுடன் பகைத்துக் கொள்ளக்கூடும். அபிப்பிராயபேதங்களுக்கு இடம் கொடாது மனத்திடத்துடன் நடந்துகொள்ளவும்.

**மீனம்-** உங்கள் வாழ்க்கையில் புதிய சூழ்நிலை தென்படும். உங்கள் வாழ்க்கையில் புதிய சூழ்நிலை உருவாகும். இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம். கல்வியிலும் முன்னேற்றம் தென்படுகின்றது. ஆக்கப்பணியில் வெற்றியுண்டு.


# விட்டாஸ்ப்ரே

(பாவனையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும்!)

26 % வெண்ணைச்சத்து உள்ள

| | மொத்த விற்பனை | சில்லறை விற்பனை |
|---|---|---|
| 1 றுத்தல் டின்னின் விலை | 36-20 | 3-15 |
| 2 1/2 ,, ,, | 86-25 | 7-40 |

பிரிட்டிஷ் சிலோன் கோப்பரேஷனுக்காக ஹோலந்தில் தயாரிக்கப்பெற்றது.

வடமாகாண விநியோகஸ்தர்கள்-

சி. சின்னத்துரை அன் பிறதர்,

39, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

1713



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அரசியல் வாழ்வு தனி வாழ்வின் எதிரொலியாகவே இருத்தல் வேண்டுமென்று நான் நினைக்கின்றேன். இவை இரண்டுக்குமிடையே பிளவு இருக்க முடியாது.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 7-ந் திகதி (23 - 8 - 69)


## நல்ல சகுனம்

''இந்நாட்டில் சிங்களவர்களைப் போலவே தமிழர்களும் எல்லா உரிமையும் பெற்று வாழும் உரித்துடையவர்கள். எனவே தமிழர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு ஓரேயடியாகத் தீர்வுகாண்பதற்கு விரைவில் ஒரு வட்டமேசை மகாநாடு கூட்டப்படவேண்டும்.''

இப்படியொரு நல்ல யோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மீரிகமைப் பிரதிநிதி திருமதி சிவா ஒபயசேகரா ஆட்சிமன்றத்தில் கூறியிருக்கிறார். நம்ப முடியாத விஷயங்கள் சில சமயங்களில் நடந்துவிடுகின்றன. சில நல்ல யோசனைகள் எதிர்பாராத இடத்திலிருந்தும் வெளிவந்துவிடுகின்றன. யார் எப்போது எந்த இடத்தில் சொன்னாலும் நல்ல யோசனையை ஏற்றுச் செயற்படுத்தவேண்டியது அறிவுடையோர் கடமை.

இந்த நாடு பெற்ற சுதந்திரம் ஒருபகுதி மக்கள் மட்டும் அனுபவிப்பதற்கல்ல. இந்த நாட்டில் வாழும் சகல மக்களும் நாட்டின் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு உரிமையுடையவர்கள் துரதிர்ஷ்டவசமாக இந்நாட்டின் சுதந்திரம் பெரும்பான்மை மக்களுக்கு மட்டுமே கிடைத்திருப்பதாக, அரசியல் ஆதிக்கப்போட்டியை அடிப்படையாகக்கொண்டு அரசியல் வாதிகள் சிலர் தவறான அபிப்பிராயத்தை பெரும்பான்மை மக்கள் மனதில் ஊன்றிவிட்டனர். இதன் விளைவாக வகுப்புவாதம் தலைதூக்கி தேசிய ஐக்கியம் சீர்குலைந்து, நாடு அரசியல் சுதந்திரம் பெற்று இருபத்தோராண்டுகளான பின்னரும் பொருளாதார சுதந்திரம் பெற முடியாமலிருக்கிறது. இன மதபேதமின்றி இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுழைத்தாலே நாடு பொருளாதார சுதந்திரம் பெறமுடியுமென்பதை அரசியல் தலைவர்கள் உணர்ந்துள்ளனர். ஆனாலும் இது பேச்சளவில் தான் இருக்கிறது. செயலில் தேசிய

ஆனாலும் இன்று அநேதோம்பே பிரதிநிதி அங்கம்வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மீரிகமைப் பிரதிநிதியே தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு வட்டமேசை மகாநாடு கூட்டவேண்டுமென்று யோசனை தெரிவித்திருக்கிறார். தமிழர் பிரச்னையைக் கிளப்பி அரசியல் ஆதாயம் பெறுவதையே நோக்கமாகக் கொண்ட நம்நாட்டு அரசியல் வாதிகள் அதுவும் பொதுத் தேர்தல் நெருங்கிவரும் இச்சமயத்தில் வட்டமேசை மகாநாடு கூட்டுவதற்கு ஒப்புக்கொள்ளுவார்களா என்ற சந்தேகத்துக்கு இனி இடமிருக்கமுடியாது. ஏனெனில் ஆட்சிபீடத்தில் அமரும் வாய்ப்புப் பெற்றுள்ள இரு பெரும் கட்சிகளில்ஒன்றான இன்றைய பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் ட்சியில் செல்வாக்குடைய மீரிகமைப் பிரதிநிதியே இந்த யோசனையைத் தெரிவித்திருக்கிறார், இந்தியாவில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, ஜனாதிபதி தேர்தலில் ஈட்டிய வெற்றியும் அவரது பொருளாதாரக் கொள்கைக்கு கிடைத்த அங்கீகாரமும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் மொழிக் கொள்கை சம்பந்தமாக மாறுதல் ஏற்படுத்தியிருப்பதற்கு இது ஓர் அறிகுறியாக இருக்கலாம்

சில தினங்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் 'தங்கவேலி' திறப்புவிழா வைபவத்தில் பிரதமரும் எதிர்க்கட்சித்தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவும் ஒன்றாகக் கலந்துகொண்டனர். சமயவைபவங்களில் மாத்திரமல்லாது நாட்டின் முன்னேற்றம் சம்பந்தமான இதர விஷயங்களிலும் எதிர்க்கட்சித் தலைவரின் ஒத்துழைப்பைப்பெறப் போவதாக பிரதமர் தெரிவித்திருந்தார். இதற்கு மீரிகமைப் பிரதிநிதிஅடியெடுத்துக் கொடுத்திருக்கிறார்.

**ஆட்சிமன்றத்திலே**

நமது சபை நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

# இந்திராவின் சாதனை இங்கு தேர்தல் பிரசாரக் கருவியா?



''மாஸ்கோவில் மழை பெய்தால் இங்கே குடை பிடிப்பவர்கள்!'' என்று பொதுவுடைமைத் தோழர்களைச் சிலர் கிண்டல் செய்வார்கள். பொதுவுடமைத் தோழர்களின் ஐக்கியம் அண்மைக்காலங்களில் மாஸ்கோ - பீகிங் என இரு பிரிவுகளாகிவிட்டபின்னர் இந்தச் சொற்றொடர் ஓரளவு வழக்கழிந்த சொற்றொடராகிவிட்டது என்றாலும், சர்வதேசத் தொடர்புகள் மேலும் மேலும் வலுவடைந்துகொண்டும், பலமடைந்து கொண்டுவரும் வேளையில், நமது அண்டைநாடான - உலகின் மிகப் பெரும்ஜனநாயகநாடான இந்தியாவில் கடந்த சில நாட்களாக வலதுசாரிகளுக்கும் - இடதுசாரிகளுக்கும் இடையே நடைபெற்ற மிக உக்கிரமான பலப்பரீட்சை, நமது நாட்டு அரசியலிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை.

ஆட்சிமன்றத்திலே ஏழாவது நாளாக, வரவு செலவுத்திட்டம் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்றபோது, முதல் பேச்சாளராகக் கலந்துகொண்ட மதவாச்சிய எம்.பி.-முன்னை நாள் அமைச்சர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உபதலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திரு. வி. வி. கிரி இந்திய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை, ''முற்போக்குவாதிகளுக்குக் கிடைத்தமாபெரும் வெற்றி எதிர்காலத்தில் ஏற்படப் போகும் மாற்றங்களுக்குக் கட்டியம் கூறும் வெற்றி'' எனப் பாராட்டி அடியெடுத்துக்கொடுத்தார். ''வந்த

செய்யமுயலாத — செய்யக் கூடிய துணிச்சலில்லாத — ஒரு மாபெரும் சாதனையை அங்கே ஒரு பாரதப் பெண் செய்து முடித்துவிட்டார்!'' என்று பெண்ணின் பெருமையைப் பெருமையுடன் எடுத்துச்சொன்னர்.

எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்' என்ற தோரணையில், ''பாரதப் பெண் பிரதமர் செய்து முடித்துள்ள இந்தச் செயற்கரும் செயலில் ஈழமணித் திருநாட்டின் பெண் குலம் மட்டுமல்ல, அகில உலகிலும் உள்ள பெண் குலம் முழுவதுமே வியந்து போற்றிப் பாராட்டுகிறது'' என்று, மைத்திரிபால அடியெடுத்துக்கொடுத்ததைத் தொட்டுக்காட்டிக்கொண்டு வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் இறங்கினர் திருமதி சிவா ஒபயசேகரா!

இந்த இரு பேச்சுக்களும் வி. வி. கிரியின் வெற்றியை எதிர்க்கட்சியினர் எந்தக் கோணத்திலிருந்து பார்க்கின்றனர்— பிரச்சாரம் செய்கின்றனர் என்பதைக் கோடிட்டுக் காட்டிவிட்டன. இவர்களுக்கும், இவர்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கோஷ்டியினருக்கும் தக்க பதிலடிகொடுக்கவேண்டும் என்ற கங்கணம் கட்டிக்கொண்டு எழுந்தார் கைத்தொழில் அமைச்சர் பொரலுகொட சிங்கம்— திரு. பிலிப்குணவர்தன!

இந்தியாவிலும் இதே போல்தான் கிராமாந்திரமக்களின் நன்மைக்காகக் கடன் வசதிகளைச் செய்துகொடுக்க வங்கிகள் இல்லாததால் தான் இன்றைய நெருக்கடி நிலை அங்கே தோன்றியுள்ளது என்று இந்தியாவில் வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டியதற்கான பூர்வாந்திரத்தை விளக்கினர்.

காங்கிரஸ் வேட்பாளர் சஞ்சீவி ரெட்டி தோற்கடிக்கப்பட்டு, பிரதம மந்திரி இந்திரா காந்தியால் ஆதரிக்கப்பட்ட வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டி ''ஜனநாயக நடைமுறைத் தத்துவத்துக்கு ஒப்ப நாட்டிலே நல்லாட்சி நிலவ வேண்டுமானால், மக்களின் பிரதிநிதியான பிரதம மந்திரியின் எண்ணம் தான் வெற்றி

தடையாக வரும் ''கட்சி அதிகாரிகளின் சர்வாதிகாரம் தகர்த்து எறியப்பட வேண்டும்'' என்று கோபாவேசம் வந்தவர்போல், பேச ஆரம்பித்தார்!

சூடு பிடிக்க ஆரம்பித்தவுடனேயே, சுரீரென்று அடுத்து விழுந்த வார்த்தைகள் எதிர்க்கட்சிகளைச் சாடின!

அங்கே நடந்ததைச் சுட்டிக்காட்டி, அடுத்து இங்கேயும் அதேஅடிவிழப்போகிறது என்று தம்பட்டம் அடிப்பவர்களும் நமது நாட்டில் இருக்கிறார்கள், அவர்களுக்கு ஒன்று சொல்கிறன்'' என்று ஆற அமர எதிர்க்கட்சியிலிருந்து ஒரு சில எம். பிக்களைப் பார்த்துவிட்டு கண்ணுடியைக் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டு, குரலை உயர்த்தி, ''இந்திராகாந்தி இங்கேயுள்ளவர்களைப்போல, பெரும் நிலக்கிழார்களைக்கொண்ட நிலப்பிரபுத்துவக் குடும்பத்திலேயிருந்து வந்தவர் அல்ல'' என்று கர்ஜித்தது பொரலுகொடச் சிங்கம்!

இப்படிக் கர்ண கடூரமாகத் தாக்கப் படுபவர்கள் யாராக இருக்கலாம் என்ற சந்தேகத்துக்கெல்லாம் எள்ளத்தனையும் இடம்வைக்காமல், தனது கோபாவேசப் பேச்சைத் தொடர்ந்ததார் பிலிப்.

### இவர்களால் முடியாது

''சோஷலிஸவாதிகள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் சிலர், நிலப்புரபுத்துவக் குடும்பத்தைச் சேரா—பெரும் நிலக்கிழார் அல்லாத ஒருவரின் தலைமையைத் தேடிக்கொள்ள முடியவில்லை. **அரசியல் அரிச்சுவடி தெரியாத அறிவிலியின் பின்னல் அணிவகுத்து நிற்கிறார்கள்''** என்று முழங்கித் தள்ளிவிட்டு, இன்னும் விளக்கமாக இதோ சொல்கிறார் பிலிப்.

''ராஜரட்டையைச் சேர்ந்த மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த மஹாவெலதென்ன, ரத்வத்தை நிலப்பிரபுத்துவப் பரம்பரையினரும், மேல்மாகாண நிலப்பிரபுத்துவ பரம்பரையினரான பண்டாரநாயகாக்களும் சேர்ந்து இந்த நாட்டுக்கு ஒரு நாளும் சோஷலிஸத்



முடியாது'' என்று ஆணித்தரமாக, அழுத்தந்திருத்தமாக கூறிவிட்டு ''இந்தப் பரம்பரையினர் 1818 ஆண்டுப் புரட்சியிலே மக்களைக் காட்டிக்கொடுத்தார்கள் என்ற சரித்திரச் சான்றுகூட இருக்கின்றதே!'' என்று இறுதி முத்தாய்ப்பு வைத்தார்!

கிரியின் தேர்தலைப் பயன்படுத்திப் பிரச்சாரம்செய்ய நினைத்தவர்களைக் கிறுகிறுக்க வைத்துவிட்டு வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் அடுத்து இறங்கினர் பிலிப்.

### வரவு செலவுத்திட்ட விவாதம்

''பெரிய, பெரிய, துணி ஆலைகளெல்லாம் ஆரம்பிக்கப்படுவதால், கைத்தறியாளர்களின் உற்பத்திகளுக்குப் போதிய ஆதரவு கிடைக்காமலிருக்கிறது! நாளடைவில் அவர்களுக்குத் தொழிலே கிடையாது போய்விடலாம்'' என்று மீரிகமைத் தொகுதி பெண் எம். பி. திருமதி சிவா ஒபயசேகரா தெரிவித்த அச்சத்திற்கு, பெண்களுக்கு நன்கு விளங்கக்கூடிய அநிமையான உதாரணத்தின் மூலமாக, சரியான பதில் கொடுத்தார்.

''பெரிய, பெரிய ஹோட்டல்களும் சாப்பாட்டுக் கடைகளும் திறக்கப்பட்டிருப்பதால் வீட்டிலே சமையல் செய்வது ஒன்றும் தடைபடவில்லையே என்றுகேட்டு, வீட்டிலே ஸ்பெஷலாக தனி ருசியுடன் சாப்பிடுவதைப் போலவே கைத்தறியின் தனிவகையான மோஸ்தர்களுக்கும், தயாரிப்புகளுக்கும் என்றும் 'மார்க்கட்' இருக்கும் என்றார் பிலிப்!

## 'கடவுள் சிந்தனையை குழந்தைகளுக்கு ஊட்டவேண்டும்'

### தாய்மார்களுக்கு வேண்டுகோள்

அல்லைப்பிட்டி, வெள்ளி

''சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு சமயக்கல்விகளை ஊட்டவேண்டும். அப்போது தான் அவர்கள் பெரியவர்களாய் வளர்ந்து நாட்டிலே நற்பிரசைகளாய் ஜீவியம் நடாத்த முடியும் ஒரு பிள்ளையை நல்லவனாக ஆக்குவதும் கெட்டவனாக ஆக்குவதும் தாயினால் தான் முடியும். ஆண்டவனின் சிந்தனைகளை குழந்தைகளுக்கு ஒரு தாய் புகட்டி வருவாளானால் அக்குழந்தைகள் தெய்வீகக் குழந்தைகளாக வளர முடியும்.''

மேற்கண்டவாறு வேலணை நால்வர் மடத்தில் நடைபெற்றுவரும் சமயவிழாவின் போது யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ''நாகரீகம் நாளுக்கு நாள் மேலோங்கி வளர்ந்து கொண்டு போகப்போக மக்களுக்கு தெய்வத்தின்மீது அக்கறையேஇல்லாமல் போகின்றது. சிலருக்கு இளமைப் பருவத்தில் தோன்றாத பக்தி ஞானம் வயோதிப பருவத்தில் தோன்றுவதை நாம் கண்ணாரக் காண முடிகின்றது. கடவுளை நாம் மறந்தாலும் அவர் எம்மை ஒரு போதும் மறப்பதே கிடையாது. நமக்கு நோய், கஸ்டம் வரும்போது தான் கடவுளை நினைக்கின்றோம். எனவே ஆண்டவன் தன்னை ஒரு தரமாவது நினைக்கும் படிதான் எமக்கு நோய் முதலிய துன்பங்களை உண்டாக்குகின்றான். இன்று தாழ்த்தப்பட்ட மக்களெனக் கூறப்படுவோரை உயர்சாதி மக்கள் ஆலயத்தினுள்ளே சென்று வழிபட விடாது ஆலயக் கதவுகளைப் பூட்டி வைக்கின்றார்கள். இது மகா கேவலமான செயலாகும்,'' இந் நிகழ்ச்சிக்கு வேலணை நால்வர் மட அதிபதி செல்லப்பா சுவாமிகள் தலைமை வகித்தார்.

## இந்தியாவின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துணிச்சலாகவும், மனோதிடத்துடனும் அவர் ஆற்றும் செயல்கள் குறித்து நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

திரு. கிரியின் வெற்றி இந்திய மக்களுக்கு மட்டுமின்றி இந்திய நண்பர்களுக்கும் முன்னேற்றத்தையும் சமாதானத்தையும் நாடி நிற்கும் சகல சக்திகளுக்கும் பெரும் நம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் தந்துள்ளது. கிரியின் வெற்றி சுதந்திரத்தின் பின் கடந்த 20 ஆண்டுகளாக இருள்மூடியிருந்த அரசியல் அரங்கின் உதயசூரியன் போன்று தென்படுகிறது. இது காங்கிரஸ் கட்சியின் ஐக்கியத்தை அச்சுறுத்தியிருக்கலாம். ஆனல் இந்தியாவின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்திவிட்டது.''

அதற்கு முன்னர் ஒரு கமிஷன் நியமிக்கப்படவேண்டும். அந்தக் கமிஷன் இது பற்றி விசாரணை செய்து குறிப்பிட்ட என்ஜினியர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் நியமிக்கப்படும் கமிஷனில் சபை மேயர் உட்பட அங்கத்தவர்களும் சேர்க்கப்படல்வேண்டும்.

திரு. அ. விசுவநாதன், இவ்விசாரணையை நடாத்த சபைக்கு அதிகாரமில்லை என்ற சட்டப் பிரச்னையை சட்டப்புத்தகம் மூலம் எடுத்துக்காட்டினர்.

திருத்தப்பிரேரணை சபையில் எழுத்தில் கொடுக்கப்படவேண்டும் என்றார் மேயர்.

திரு. அல்பிறெட் துரையப்பா, உடனடியாக அத்திருத்தப்பிரேரணையை எழுத்தில் கொடுக்க திரு. ஏ. ஜி. ராஜசூரியர் அதனை ஆமோதித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் திரு.

சபைக்குத் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது மேயர் பதவிக்கும் கஷ்டம் கொடுக்கலாம்.

மேயர் தெரிவில்தான் மேயருக்கு எதிராக வாக்களித்ததையும் நினைவுபடுத்திச் சொல்லிய ஜனாப் பஷிர் அதற்காக நீதியில்லாமல் மேயருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தால் தான் ஒருபோதும்வாக்களிக்கப்போவதில்லையென்றும் தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கூட்டத்தை ஒத்திவைக்கவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட பிரேரணைக்குச் சாதமாக 9 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் கிடைத்ததால் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

தம்பு கந்தையா: இந்த மாநகர சபையில் இன்று நேர்மையான ஆட்சி நடக்கவில்லை. ஊழல்கள் மலிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம் பெற முடியாமலிருக்கிறது. இன மதபேதமின்றி இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுழைத்தாலே நாடு பொருளாதார சுதந்திரம் பெறமுடியுமென்பதை அரசியல் தலைவர்கள் உணர்ந்துள்ளனர். ஆனாலும் இது பேச்சளவில் தான் இருக்கிறது. செயலில் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதற்கு எவரும் தீர்க்கமான முயற்சி செய்வதாகக் காணேம். அரசியல் ஆதிக்கப் போட்டி இதற்கு முக்கிய காரணம் நாம் முன்னரும் பல தடவைகளில் குறிப்பிட்டதுபோல இன்றைய நமது அரசியல் அமைப்புத்தான் இதற்கு அடிப்படை.

இந்த நாட்டில் தேசிய ஐக்கியம் சீர்குலைவதற்கு மூலகாரணமாக அமைந்திருப்பது மொழிப்பிரச்னை இந்தப் பிரச்னை ஒரு தேசிய பிரச்னை இதற்குத் தேசிய ரீதியில் தீர்வு காணப்பட வேண்டுமென்பதை பலரும் பல தடவைகளிலும் எடுத்துக்கூறியும் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. மொழிப்பிரச்னைக்கு நிரந்தரமான நியாயமான தீர்வு காணப்படுவதற்கு சகல அரசியல் கட்சித் தலைவர்களையும் கொண்ட வட்டமேசை மகாநாடு கூட்டவேண்டுமென யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு ஜி, ஜி. பொன்னம்பலம் பலதடவைகளிலும் எடுத்துக்கூறி வந்திருக்கிறார். ஏறவேண்டிய செவிகளில் அவர் கூறியது ஏறவில்லை. தமிழ் மக்களின் மொழி உரிமை சம்பந்தப்பட்ட விஷயத்தில் தமிழ்த் தலைவர் ஒருவர் கூறிய யோசனையை ஆட்சிபீடத்திலிருந்தவர்களும் இருப்பவர்களும் அரசியல் காரணங்களுக்காக ஏற்றுக்கொள்ளத் தயங்கியிருக்கக்கூடும். பலதரப்பட்ட கொள்கைகளையும் கருத்துவேறுபாடுகளையுமுடையவர்கள் கொண்ட ஒரு மகாநாடு உருப்படியான முடிவு எதையும் மேற்கொள்ளமுடியாது என்றும் அவர்கள் கருதியிருக்கலாம். மொழிப் பிரச்னைக்கும் மற்றும் சிறுபான்மையோர் பிரச்னைகளுக்கும் ''ஒரே மொழி, ஒரே இனம் என்பதுதான் தீர்வு'' என்ற கருத்தை தோம்பே பிரதிநிதி ஆட்சிமன்றத்திலேயே ஒரு தடவை தெரிவித்திருந்தார். இப்படிப்பட்ட கருத்துக்கொண்டவர்களுடன் வட்டமேசை மகாநாடு கூட்டுவதால் பயன்கிடைக்குமா என்ற சந்தேகம் யாழ்ப்பாணப் பிரதிநிதிக்கே ஏற்பட்டது.

...ண்டனர். சமயவைபவங்களில் மாத்திரமல்லாது நாட்டின் முன்னேற்றம் சம்பந்தமான இதர விஷயங்களிலும் எதிர்க்கட்சித் தலைவரின் ஒத்துழைப்பைப்பெறப் போவதாக பிரதமர் தெரிவித்திருந்தார். இதற்கு மீரிகமைப் பிரதிநிதி அடியெடுத்துக் கொடுத்திருக்கிறார்.

மொழிப்பிரச்னை உட்பட வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகிய தேசியப் பிரச்னைகளுக்குத்தேசிய ரீதியில்தீர்வுகாண்பதற்கு சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் திரு. லில்மட்பெரேரா போன்ற நிதானப்போக்குள்ள அரசியல் அறிஞர்கள், பொருளாதார நிபுணர்கள், கல்விமான்கள் ஆகியோரைக் கொண்ட மகாநாட்டைக் கூட்ட பிரதமர்துணிச்சலுடன் முன்வரலாம். வட்டமேசையோ, சதுரமேசையோ, அதைப் பற்றிக் கவலையில்லை. கட்சிநலனையும் அடுத்தபொதுத் தேர்தலில்வெற்றியீட்டி எப்படி ஆட்சிபீடத்தில் அமரலாம் என்ற யோசனையையும் விடுத்து நாட்டை முன்னேற்றுவதற்கு என்னசெய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் இந்த மகாநாட்டைக் கூட்டினுல் ஓரளவாவது பயன்கிடைக்காமல் போகாது.

## முதலாம்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

சாட்சி தர்மலிங்கத்தை கொலைச் சம்பவத்திற்குமுன் தெரியாது கோர்ட்டில்சாட்சியமளித்த பின்தான் தெரியும் சடலம் மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்டபின் தர்மலிங்கம் எனது வீட்டுக்கு வரவில்லை மகன் (1ம் எதிரி) காசு மாறிவரச் சொன்னதை கேட்டு என்னிடம் இவர் வரவுமில்லை; என்னிடம் பேசவுமில்லை 1ம் எதிரி திருமணம் செய்யவில்லை என்னுடன்கூடவசிப்பதுமில்லை மாதத்தில் ஒரு தடவை வீட்டுக்கு வந்து போவார் வெளி ஊரில் 1-ம் எதிரி தொழில் பார்த்து வந்தார்

வேறு சிலரும் சாட்சியமளித்த பின் மேல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது பொலிஸ் தரப்பில் உதவி பொலிஸ்சுப்ரின்டன் சில்வா வழக்கை நடத்தினர் இரு எதிரிகளும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

...நாயக்கா, திரு. வி. வி. கிரி இந்திய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை, ''முற்போக்குவாதிகளுக்குக் கிடைத்தமாபெரும் வெற்றி எதிர்காலத்தில் ஏற்படப்போகும் மாற்றங்களுக்குக் கட்டியம் கூறும் வெற்றி'' எனப் பாராட்டி அடியெடுத்துக்கொடுத்தார். ''அந்த மாபெரும் உபகண்டத்தில் நேற்றிரவு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி மீரிகமை எம்.பி வானளாவப்பாராட்டிப் பேசினர்'' என்று அமைதியாக ஆரம்பித்து, தான் சொல்லப்போகும் ஒவ்வொரு வார்த்தையும் எதிர்க்கட்சித் தலைவர்களின் ஸ்மரணையில் மரண அடியாக விழவேண்டும் என்று எதிர்பார்த்தோ என்னவோ ஒவ்வொருவார்த்தையையும் நிறுத்தி, அறுத்தறுத்து, அழுத்தந்திருத்தமாக வெளியிட்டார் பிலிப்.

'இந்திய ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்டிருக்கும் முடிவு, நமக்கெல்லாம் மதிப்புத்தரக் கூடிய நல்லதொரு முடிவு'' என்று சொல்லி, நேரு குடும்பத்தினரைப்பற்றி எனக்குத் தனிப்பட்டமுறையில் நிறைந்த அக்கறை இருப்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள் என்று அறிவித்து, மோதிலால் நேரு காலத்திலிருந்து ஜவஹர்லால்நேரு, இந்திரா காந்திவரை, மூன்று தலைமுறைகளாகத் தனக்கும் நேரு குடும்பத்தினருக்கும் உள்ள நெருங்கிய தொடர்புகளை சுட்டிக்காட்டி விட்டுத் தொடர்ந்தார் பிலிப்.

இந்திரா காந்தியைப் போலவே, இவரும் ''ஒரு சில கட்சி அதிகாரிகளின் சர்வாதிகாரக் கட்டளைகளை விடத் தனது மனச்சாட்சியையே பெரிதும் மதித்து கடமைகளை நிறைவேற்றுபவர்'' ஆகையால் அவருக்குக் கிடைத்துள்ள வெற்றிகண்டு பெருமகிழ்ச்சிகொண்ட பிலிப், காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்தபோது கிராமமக்களின் அபிவிருத்திக்காக, அவர்களுக்குக் கடன்வசதிகளைச் செய்துகொடுக்கக்கூடிய வங்கியொன்றை நிறுவதான் எடுத்துக்கொண்ட முயற்சிகளை நியாயபூர்வமான பெருமையுடன் நினைவுகூர்ந்தார்.

### பெண்ணின் பெருமை

இவரைத் தொடர்ந்து மீரிகமை எம். பி. திருமதி சிவா ஒபயசேகரா, காலியாகக் கிடந்த அமைச்சர்களின் வரிசையைச் சுட்டிக்காட்டி (திரு. பிலிப் குணவர்த்தன மட்டுமே இருந்தார்.) ''இங்கேயுள்ள பதினேழு பதினெட்டு பேர்கள் கூட செய்யமுடியாத —

...க்கப்பட்ட வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டி ''ஜனநாயக நடைமுறைத் தத்துவத்துக்கு ஒப்ப நாட்டிலே நல்லாட்சி நிலவ வேண்டுமானல், மக்களின் பிரதிநிதியான பிரதம மந்திரியின் எண்ணம் தான் வெற்றி பெறவேண்டும்; அதற்குத்

...தைச் சேர்ந்த மஹாவெலதென்ன, ரத்வத்தை நிலப்பிரபுத்துவப் பரம்பரையினரும், மேல்மாகாண நிலப்பிரபுத்துவ பரம்பரையினரான பண்டாரநாயகாக்களும் சேர்ந்து இந்த நாட்டுக்கு ஒரு நாளும் சோஷலிஸத்தைப் பெற்றுத்தரவே

செய்வது ஒன்றும் தடைபடவில்லையே என்றுகேட்டு, வீட்டிலே ஸ்பெஷலாக தனிருசியுடன் சாப்பிடுவதைப் போலவே கைத்தறியின் தனிவகையான மோஸ்தர்களுக்கும், தயாரிப்புகளுக்கும் என்றும் 'மார்க்கட்' இருக்கும் என்ருர் பிலிப்!

# விசாரணையில்லாமல் தண்டனையா?

# மாநகரசபை 'என்ஜினியர் விவகார' விவாத விபரம்

காரியாலய நிருபர்

கலைக்கப்பட்ட யாழ்ப்பாண மாநகரசபை மீண்டும் கூட்டப்பட்டு எட்டு மாதங்களுக்குப் பின்னர் 'கலரி' யில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிய, ஆளுங்கட்சியினரும் சரி, எதிர்க்கட்சியினரும் சரி, தங்களுக்குள்ளேயே பிளவுபட்டு வாக்களித்ததோடு, சொல் அம்புகளையும், வாதக் கணைகளையும் மாறிமாறி எய்து, ஒழுங்குப் பிரச்னைகளையும், சட்டப் பிரச்னைகளையும் கிளப்பிக்கொண்டிருந்த ஒரு 'சூடான' கூட்டமாக நேற்று முன்தினம் மாலை சுமார் 6 மணி நேரமாக யாழ். மாநகரசபை அமளிதுமளிப்பட்டது.

இத்தனைக்கும் காரணம் மாநகரசபை உறுப்பினரும், முன்னுள் மேயருமான திரு. தா. ச. துரைராசா, வேலைப்பகுதி என்ஜினியரான திரு. சி. வைத்திலிங்கத்தை உடனடியாக இங்கிருந்து இடமாற்றஞ் செய்ய வேண்டுமென்று கொண்டுவந்த ஒரு பிரேரணைதான்.

பிரேரணை பிரேரிக்கப்பட்ட அடுத்த நிமிடமே திரு. துரைராஜாவுக்கு அருகில் இருந்த மற்ருேர் அங்கத்தவரான திரு. வி. சிவசுப்பிரமணியம் அதனை ஆமோதித்ததோடு, பிரேரணை உடனடியாக வாக்கெடுப்புக்கு விடப்படுமென எதிர்பார்த்தவேளையில், அங்கத்தவர்கள் மாறிமாறித் திருத்தப்பிரேரணைகளையும், பிரேரணை சம்பந்தமான பல 'ருசிகர' தகவல்களையும் சபையில் எடுத்துச்சொல்லத் தொடங்கினர்.

இப்பிரேரணை, சபைக் கூட்ட நிகழ்ச்சியின் 24வது அம்சமாக இருந்தபோதும், சபையின் அனுமதியுடன் இது முதலாவதாக எடுக்கப்பட்டது. கூட்டம் முடியும் வரையும் இதுவே விவாதிக்கப்பட்டுக்கொண்டும் இருந்ததால் வாக்கெடுப்பின் பின்னர் அடுத்த நிகழ்ச்சிகளை மேயர் திரு. எஸ். நாகரராசர அடுத்த கூட்டத்துக்கு ஒத்திவைத்தார்.

தற்போது கட்டப்பட்டுவரும் மார்க்கெட் வேலையில் எந்த இடத்திலும் 'கொங்கிரீட்' வேலைக்கு மண்கும்பான் மண் சேர்க்கப்படுமென எழுதி, ஒப்பந்தம் செய்யப்படாத வேளையில், வேலைப்பகுதி என்ஜினியர் யாருடைய அதிகாரமுமில்லாமல் மண்கும்பான் மண்ணைச் சேர்த்தாரென்றும், இதனுல் மார்க்கெட் நல்ல முறையில் கட்டப்படுமா என்ற சந்தேகம் வரியிறுப்பாளர்கள் மத்தியில் நிலவுவதாகவும், இந்த ஊழலால் ஒரு 'கியூப்' மண்ணில் சுமார் 60 ரூபாவரை மோசடி நடப்பதாகவும், இதற்குக் காரணமாகவிருந்த சம்பந்தப்பட்ட என்ஜினியரை உடனடியாக இடமாற்றஞ் செய்யவேண்டுமெனவும் தனது பிரேரணைமீது பேசிய திரு. தா. ச. துரைராசா தனது பேச்சை அத்துடன் நிறுத்திவிடவில்லை.

விசேஷ ஆணையாளர்கள் ஆட்சியில் இவர்மீது 15குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதாகவும், மற்ருெரு சந்தர்ப்பத்தில் இவரைத் தற்காலிக வேலைநீக்கஞ் செய்ய முயற்சியெடுக்கப்பட்டபோது, இவர் ராஜினமாக் கடிதம் கொடுத்து, பின்னர் அது வாபஸ்பெறப்பட்டதாகவும், சுமார் 7,000 ரூபாவுக்கு வாங்கக்கூடிய முனீஸ்வரன் வீதிப் பள்ளக் காணியை, இவர் அத்துமீறித் திறந்துவிட்டதால் அதற்கு இன்று நஷ்டஈடாக 13,000 ரூபாவரை வழங்கப்படாமலிருப்பதாகவும், ஆஸ்பத்திரி வீதி 'மகோகனி' மரங்களை இவர் மாநகரசபைக்கு நஷ்டம் வரக்கூடிய விதத்தில் விற்பனை செய்ததாகவும், இவர் தமது அதிகாரத்தை விஷமத்தனமாகவும், சுயநலத்துக்காகவும் பாவிப்பதாகவும் என்ஜினியர்மீது திரு. துரைராசா குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக்கொண்டு சென்ருர்.

திரு. என். ரி. செல்லத்துரை: மதிப்பான ஒரு பதவி வகிக்கும், செல்வந்தரான ஓர் அரசாங்க ஊழியர் மீது பிரேரணைக்கு அப்பாற்பட்ட குற்றச்சாட்டுகளை இந்தச் சபையில் சுமத்துவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். அவர் எனது வட்டார வாக்காளன் என்ற முறையில் இதனை எடுத்துச் சொல்ல எனக்கு உரிமையும் உண்டு.

திரு. தா. ச. துரைராசா: அது உண்மை தான். நான் அவரை தனிப்பட்ட முறையில் குறை கூறவில்லை. அவர் தமது கடமையில் செய்த தவறுகளால் அவரை ஏன் இடமாற்றம் செய்யக்கூடாது என்பதற்கான காரணங்களைத் தான் நான் சபைக்கு எடுத்துக்கூறுகின்றேன். இது என்னுடைய கடமையும்கூட.

திரு. கே. வி. தெய்வேந்திரம்: இதுசம்பந்தமாக ஒரு திருத்தப்பிரேரணையை இங்கு கொண்டுவர விரும்புகின்றேன். இங்கு கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மையானவைதான் என்ருல், அதற்கு இடமாற்றம்தான் தண்டனை அல்ல. அவர் வேலைநீக்கம் செய்யப்படவேண்டும் என்ருர் மேயர்.

திரு. அல்பிறெட் துரையப்பா, உடனடியாக அத் திருத்தப்பிரேரணையை எழுத்தில் கொடுக்க திரு. ஏ. ஜி. ராஜசூரியர் அதனை ஆமோதித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் திரு. என். அந்தோனிப்பிள்ளைக்கும், கே. வி. தெய்வேந்திரத்துக்குமிடையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது.

பிரேரணையைச் சமர்ப்பித்த திரு. தா. ச. துரைராஜா திருத்தப்பிரேரணைகளை எதிர்த்ததால் மாநகரசபைக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் திருத்தப்பிரேரணை ஏற்றுக்கொள்ளப்படவில்லையென மேயர் தெரிவித்தார்.

திரு அல்பிறெட் துரையப்பா பிரேரணை சம்பந்தமாக பேசிக்கொண்டிருக்கையில் திரு என் அந்தோனிப்பிள்ளை அடிக்கடி குறுக்கிட்டு உரத்த தொனியில் பேசியதால் இதுபற்றி மேயரிடம் முறையிட்ட திரு துரையப்பா அந்தோனிப்பிள்ளையை 3 மாதங்களுக்குக் கூட்டத்துக்கு வாமல் தடை விதிக்கவேண்டும் என்ருர்.

''மற்ற அங்கத்தவர்கள் பேசும்போது குறுக்கிடு செய்யமுடியாது'' என்று திரு அந்தோனிப்பிள்ளையைப் பார்த்து மேயர் கூறினுர்.

திருமதி அந்தோனியார் சுவாமிநாதர்: இந்த ஊழல்கள் உண்மையானுல் இது சம்பந்தமாக விசாரணை நடத்தத்தான் வேண்டும். விசாரணை நடக்கும்போது என்ஜினியர் இங்கு இருக்கக்கூடாது. அவரை முதலில் இடமாற்றம் செய்துவிட்டுப் பின்னர் விசாரணை நடத்த வேண்டும்.

உதவிமேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம்: எந்தக் குற்றத்துக்கும் விசாரணை நடாத்துவது தான் சர்வதேச வழக்கமாகும் கொலை என்ருலும் கூட இதுதான் நீதி ஆனுல் இப்பிரேரணை ''நாடு கடத்தும் ஒரு அம்சம்'' போல உள்ளது. விசாரணை வைக்காமல் எதுவும் செய்ய முடியாது. இந்தப் பிரச்னையால் மேயரின் கதிரைக்கு 'ஆட்டம்' வந்தாலும் கூட இது பற்றி மேயர் சரியான விசாரணை வைத்தபின்னரே என்ஜினியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுப்.

ஜனுப் பஷீர்: மார்க்கட் கட்டு வேலையை நாங்கள் ஏக மனதாக மேயரிடமே ஒப்படைத்தோம் என்ஜினியர் மேயரின் கீழ் தான் கடமையாற்றுவர். எனவே இதுபற்றிச் சரியான விசாரணையை பாரபட்சமின்றி நடாத்தி அதன் முடிவை வரப்பட்ட. பிரேரணைக்கு சாதமாக 9 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் கிடைத்ததால் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

தம்பு, கந்தையா: இந்த மாநகர சபையில் இன்று நேர்மையான ஆட்சி நடக்கவில்லை. ஊழல்கள் மலிந்துவிட்டது என்ருர்.

திரு. ஏ. ஜி. ராஜசூரியர் பேசுகையில், ''என்ஜினியருக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவந்திருப்பவர் எமக்குச் சந்தேகத்துக்கிடமான ஒரு பேர்வழி. இந்தப் பிரேரணை மேயர் மீது எய்யப்பட்ட ஒரு அம்பு. என்ஜினியர் மீது தாக்கப்பட்டுள்ளது 'உங்கள் குழுவிலுள்ள சிலர் உங்களை அழிவுப்பாதைக்குக் கொண்டுசெல்கிருர்கள். உங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டுவர நேற்றிரவு எடுக்கப்பட்ட, ஒரு முயற்சியும் எனக்குத் தெரியும் சந்தர்ப்பம் வரும்போது நாங்கள் அதை உங்களுக்குச் சொல்வோம். எங்கள் குழுவுடன் (அல்பிரட் குழு) சேர்ந்து வாருங்கள் நல்ல ஆட்சியை அமைப்போம்'' என்று மேயரைப் பார்த்துச்சொன்னுர். இப்பேச்சின் ஒரு சந்தர்ப்பத்தில் என்ஜினியரிடம் ஓர் அங்கத்தவர் 3000 ரூபாய் லஞ்சம் கேட்டது பற்றியும் திரு. ராஜசூரியர்தெரிவித்தபோது சபையில் பெரும் கலகலப்பு ஏற்பட்டது.

இப்பிரேரணையை விவாதிக்கவேருெருதிகதி போடப்படவேண்டும் என்று உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் வேண்டுகோள் விடுக்க அதனை திரு. துரைராஜா எதிர்க்க, இருவருக்குமிடையில் நடைபெற்ற வாக்குவாத முடிவில் தன்னை கூட்டத்தைவிட்டு எவரும் வெளியேற்றமுடியாது என்றும், வேண்டுமானுல் பொலிஸாரின் உதவியுடன் கதிரையுடன் தான் வெளியேற்ற வேண்டும் என்று திரு துரைராஜசிங்கம் உரத்த தொனியில் பேசினுர்.

இறுதியில் இப்பிரேரணை 13 வாக்குகள் பெற்று நிறைவேறியது, உதவி மேயர் எதிர்த்து வாக்களித்தார். மேயர் உட்பட 9 பேர் நடுநிலைமைவகித்தனர்.

ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியலைப் போதிக்கும் நோக்கத்திற்குத்தேவையான நிதிகள், கட்டடங்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைத்தையும் போதியளவு ஏற்படுத்தி, யாழ்ப்பாணம் நமசிவாயவித்தியாலயத்தை உயர்நிலைக் கல்லூரியாகத் தரமுயர்த்தும்படி, கல்வி கலாச்சார அமைச்சரைக் கேட்டுக்கொள்வதென திரு. கே. வி. தெய்வேந்திரம் கொண்டுவந்த தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org